# உதயன்



www.onlineuthayan.com

24 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 341 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 16 வியாழக்கிழமை (01/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


# விவாதப் போர் இன்று ஆரம்பம் ஜெனிவாவில்

## நெருக்கடியைச் சமாளிக்க இலங்கை பகீரதப்பிரயத்தனம்

(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

ஜெனிவா, நவம்பர் 1

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரில் இன்று வியாழக்கிழமை இலங்கை விவகாரம் குறித்து தீவிரமாக ஆராயப்படவுள்ள நிலையில், இலங்கையின் நீதித்துறைக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு அரசு முயற்சித்துவருகின்றது எனச் சுட்டிக்காட்டி பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் புதிய குற்றச்சாட்டுக்களை அடுக்கி வைத்துள்ளன.

இதேவேளை, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக இலங்கை இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க

பார்க்க பக்கம் 4



## மூவருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், நவ.1

டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளாகிய 3 பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குருநகர், கந்தர் மடம், திருநெல்வேலி கலாசாலை வீதி ஆகிய இடங்களிலேயே அந்த மூன்று பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## அவசர நிவாரணம் வழங்க நிதி

### முல்லைக்கு கூடுதல் ஒதுக்கீடு

கொழும்பு,நவ.1

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசர நிவாரணப் பணிகளை முன்னெடுக்க போதியளவு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடும் காற்று மற்றும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 4



முல்லைத்தீவில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் கடும் மழையால் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர். குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இருக்கவோ, உணவு தயாரிக்கவோ முடியாத நிலை அவர்களுக்குஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு அளம்பிலில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பம் ஒன்றின் நிலை இதுதான். (த-400)

## கேப்பாபிலவு குடும்பங்கள் உணவின்றி அந்தரிப்பு

### குடிசைக்குள் வெள்ளம் புகுந்ததால்

புதுக்குடியிருப்பு, நவ.1

கேப்பாபிலவு, சீனியா மோட்டையில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளதால் உணவு சமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர். இதுவரை எந்தவித உதவிகளும் வந்துசேரவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த சுமார் 178 குடும்பங்கள் கேப்பாப்பிலவு சீனியாமோட்டைப் பகுதியில் தற்காலிகமாகத்

பார்க்க பக்கம் 4

## 5 ஆட்லறிகள் முல்லையில் மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.1

முள்ளிவாய்க்கால் கடற்கரை ஓரத்தில் ஐந்து ஆட்லறிகள் மற்றும் சக்தி வாய்ந்த இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகு ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் தரை தட்டியுள்ள ஜோர்தானிய கப்பலுக்கு அருகில் இவை கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்டவை 130 மி.மீ, மற்றும் 152 மி.மீ ரகத்தைச் சேர்ந்த ஆட்டிலறிகள் எனவும் இவை இறுதிப்

பார்க்க பக்கம் 4

## கூட்டமைப்பு ஏற்கும் தீர்வையே இந்தியா வலியுறுத்துகிறது - பீரிஸ்

கொழும்பு, நவ.1

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம் எதுவும் கொடுப்பதாக நாம் உணரவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதே தனது விருப்பம் என இந்தியா கூறுகின்றது - என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்து குழுமத்தின் புரொன்ட்லைன் இதழுக்குவழங்கியுள்ளசெவ்வி

பார்க்க பக்கம் 4

## சன்–சீ கப்பலில் சென்ற 20 பேருக்கு அகதி அந்தஸ்து

கொழும்பு, நவ.1

சன்–சீகப்பல் மூலம் 2010 ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற 492 இலங்கையர்களில் 20 பேருக்கு மாத்திரமே இதுவரையில் அகதி அந்த

பார்க்க பக்கம் 4

## மழையால் கிளிநொச்சியில் 1,223 குடும்பங்கள் பாதிப்பு

### குளங்களின் நீர்மட்டமும் உயர்வு

அக்கராயன், நவ 1

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 1223 குடும்பங்களைச் சேர்ந்த 4446 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ள

பார்க்க பக்கம் 4

## ஜனாதிபதி உத்தரவிட்டால் வடக்குத் தேர்தல் உடனே

### காத்திருக்கிறது தேர்தல் திணைக்களம்

கொழும்பு, நவ.1

இழுபறி நிலையிலுள்ள வடமாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்துவதற்கு ஜனாதிபதியின் கட்டளைக்காகத் தேர்தல் திணைக்களம் காத்திருப்பதாக அறிய முடிகின்றது. ஏனெனில், மாகாணசபையொன்றுக்கு முதன்முதலாகத் தேர்தல் நடைபெறும்போது அதற்கு

பார்க்க பக்கம் 4

## '13' ஐ ஆதரிப்பவர்களை அரசிலிருந்து துரத்துங்கள்

### தேசப்பற்றுள்ள இயக்கம் போர்க்கொடி

கொழும்பு, நவ.1

நாட்டுக்குப் பேராபத்தான 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாகக் குரல்கொடுத்துவரும் அமைச்சர்களான வாசு, திஸ்ஸ, டியூ ஆகியோரை ஜனாதிபதி உடனடியாக அரச கூட்டுக்குள் இருந்து வெளியேற்றவேண்டும். இல்லையேல் இவர்களால் அரசுக்கு எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் என்று தேசப்

பார்க்க பக்கம் 4






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் 49, 788 பேர் பாதிப்பு

## இடர் முகாமைத்துவ நிலையம் அறிவிப்பு

கொழும்பு,நவ.1

நாட்டில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ள இடர் காரணமாக இதுவரை 13,074 குடும்பங்களைச் சேர்ந்த 49,788 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



வெள்ள இடரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5583 குடும்பங்களைச் சேர்ந்த 19,785 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 503 குடும்பங்களைச் சேர்ந்த 1721 பேர் 9 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் 469 குடும்பங்களைச் சேர்ந்த 1836 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு யாழ்ப்பாணத்தில் 2164 குடும்பங்களைச் சேர்ந்த 7107 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மண் சரிவு வெள்ள இடரால் நுவரெலியா மாவட்டத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும் கேகாலை மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் குருநாகல் மாவட்டத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 274 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும் பாதிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் 1101 குடும்பங்களைச் சேர்ந்த 4626 பேர் பாதிக்கப்பட்டதோடு 39 வீடுகள் முற்றாகவும், 89 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 72 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேர் 7 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 853 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 10 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டம் வத்தளையில் 3453 குடும்பங்களைச் சேர்ந்த 15152 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 256 குடும்பங்களைச் சேர்ந்த 1234 பேர் 5 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காற்று காரணமாக 18 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 350 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 298 குடும்பங்களைச் சேர்ந்த 1186 பேர் இரு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(ச)

## இலங்கைக் கடலில் புயலால் மூழ்கியது வியட்நாம் கப்பல்

கொழும்பு, நவ.1

'நீலம்' புயலில் சிக்கி, வியட்நாமுக்குச் சொந்தமான சரக்குக் கப்பலொன்று இலங்கை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகி மூழ்கியது.

மியான்மாரில் இருந்து இந்தியாவுக்கு 6500 தொன் எடையுடைய மரங்களை ஏற்றிச்சென்ற 'சாய்கோன் குயீன்' என்ற சரக்குக் கப்பலே இவ்வாறு இலங்கை கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 12.15 மணியளவில், இலங்கை கடற்பரப்பில் குறித்த கப்பல் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஆபத்தில் சிக்கியுள்ளதாக இந்தக் கப்பலில் இருந்து உதவி கோரி அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அதன் பின்னர் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

இதனையடுத்து இலங்கை கடற்படை மற்றும் அமெரிக்க கடற்படையினர் இணைந்து தேடுதல் நடத்தினர். இதன் போது மிதவைப் படகில் இருந்து 19 மாலுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கப்பலில் 22 பேர் பயணித்துள்ளனர். எனினும் கப்பலின் கப்டன் உள்ளிட்ட 3 மாலுமிகள் இன்னமும் மீட்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ந)

## இளையராஜா இசை நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடக்குமாம்

கொழும்பு, நவ.1

புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு மற்றும் சண்டி புயல் என்பன காரணமாக, இளையராஜாவின் கனடா இசை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை கனேடிய தமிழ் பேரவை மறுத்துள்ளது. திட்டமிட்டபடி நவம்பர் 3ஆம் திகதி இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடக்கும் என்று அந்தப் பேரவை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கனேடியப் பேரவையின் சார்பில் நிகழ்ச்சித் தொடர்பாளர் தருமி என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இளையராஜாவின் இசை நிகழ்ச்சி பிற்போடப்படவில்லை. நிகழ்ச்சியில் பங்கேற்போரில் 60 சதவீதமானோர் கனடாவுக்கு வந்துவிட்டனர்.

இளையராஜா மட்டும் இன்னமும் வரவில்லை. அவரும் வருவதற்கு தயார் நிலையில் உள்ளார். ஏனவே நவம்பர் 3ஆம் திகதி நிகழ்ச்சி நடைபெறப்போவது உறுதி. இதில் எந்த மாற்றமும் இல்லை. இந்த இசை நிகழ்ச்சி நடப்பதை கனடா மக்கள் வரவேற்கிறார்கள். எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இதைப் பிடிக்காத ஒரு சிலர் தான் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியை வைத்து அரசியல் நடத்தப் பார்க்கிறார்கள்'' என்றார்.

(ந)

## இளைஞரின் சடலம் மீட்பு

கைதடி, நவ.1

வீட்டின் அறையைப் பூட்டிவிட்டு உள்ளே நின்றவர் தூக்கில் தொடங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கைதடி மேற்கில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மறவன்புலவைச் சொந்த இடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் நிஷாந்தன் (வயது-25) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மாலை 7.30 மணியளவில் இவர் வீட்டின் அறைக்குள் இருந்த போது சாப்பிட வருமாறு சகோதரன் அழைத்த வேளை அறைக்குள் சத்தம் இல்லாதது கண்டு கதவைத் திறந்து பார்த்தவேளை இவர் தூக்கில் தொங்கியமை தெரிய வந்தது.

சம்பவ இடத்துக்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சாவகச்சேரி பதில் நீதிவானும் உடனடியாக வந்து விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் சடலம் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மரண பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் நேற்று உறவினர்க்ளிடம் கையளிக்கப்பட்டது. (த-288)

## வங்கியில் நகை மோசடி மேலும் நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் அண்மையில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான அடைவு நகைகளை மோசடி செய்த குற்றச் சாட்டில் அந்த வங்கியைச் சேர்ந்த மேலும் நான்கு உத்தியோகத்தர்கள் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களில் கர்ப்பிணித் தாயையும் பாலூட்டும் தாயையும் பிணையில் விடுதலை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் ஏனையவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பல கோடி ரூபா பெறுமதியான நகைகள் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதே வங்கிக் கிளையில் அடைவுப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த ஒருவரும் வங்கியுடன் தொடர்பைப் பேணிய இன்னொருவரும் முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணையில் இருந்து வந்த இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதே வங்கிக் கிளையில் பணிபுரியும் நான்கு உத்தியோகத்தர்கள் நேற்றுப் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அந்த நால்வரில் மூன்று பெண்களும் உள்ளடங்குவர். ஒரு பெண் கர்ப்பிணிப் பெண் மற்றொரு பெண் பாலூட்டும் தாய். அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்தனர்.

சம்பவம் தொடர்பில் உடனடியாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். மோசடி தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்ட பின்னரே ஏனைய நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்தனர் என்று நீதிவான் தெரிவித்தார்.

பிணை விண்ணப்பத்தை அடுத்து பாலூட்டும் தாயையும் கர்ப்பிணிப் பெண்ணையும் நீதிவான் பிணையில் விடுவித்தார்.

மற்றப் பெண் வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர் என்று கூறப்பட்டது. அவரின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறும் சிகிச்சை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதால் வைத்திய சாலைக்குக் கூட்டிச் செல்லுமாறும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டார். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(த-4)

## களவாடப்பட்ட ஓட்டோ நேற்று மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.நகரில் வைத்து நேற்று முன்தினம் திருடப்பட்ட 5 லட்சம் ரூபா பெறுமதியான ஓட்டோ நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டதோடு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.நகர் பெரிய கடை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று நேற்றுமுன்தினம் நண்பகல் திருட்டுப் போய்விட்டது. இது தொடர்பில் அதன் உரிமையாளர் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸார் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டனர். இதன்போதே உடுவில் பகுதியில் குறித்த ஓட்டோ கைவிடப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டது. அந்த ஓட்டோவிலிருந்து கைத்தொலைபேசி ஒன்றையும் பொலிஸார் மீட்டனர். அதன்படி கைத்தொலைபேசிக்கு உரியவரான ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். (த-4)

## காற்றுடன் கூடிய மழை இன்றும் தொடர வாய்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

காற்றுடன் கூடிய மழை இன்றும் தொடரும் என்று வானிலை அவதானிப்பு நிலையம் எதிர்வு கூறியுள்ளது. கடலில் கடும்காற்று. கொந்தளிப்பு என்பன தொடருமென்பதனால் மீனவர்களைக் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டிருந்த தாழமுக்கம் வட பகுதியினூடாக இந்தியாவைச் சென்றடைந்துள்ளமையால் சூறாவளித் தாக்கம் ஏற்படவாய்ப்பில்லை.

எனினும் காற்றுடன் கூடிய மழை தொடரும். கடலில் மணிக்கு 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் அதேவேளை மணிக்கு 70-80 கிலோமீற்றர் வேகத்திலும் வீசுவதற்கு சாத்தியமுண்டு.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிவரை அதிகளவு மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் 81.8 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளது.

வவுனியாவில் 22.8, மன்னார் 17.8, திருகோணமலை 17.9 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை -

கடந்த சில நாள்களாகத் தொடரும் கன மழை காரணமாக நேற்று முற்பகலுக்குப் பின்னர் பிற்பகல் 6 மணிவரை யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மழை இல்லை. எனினும் பிற்பகல் 6 மணிக்குப் பின்னர் மழை தொடர்ந்தது. (த-4)

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மாநகர சபைக்கு முன்பாகவுள்ள குறுக்குத் தெரு வீதியில் கோயிலொன்றுக்கு அண்மையாக உருக்குலைந்த நிலையில் சடலம் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது. உரிய விசாரணைகளின் பின்னர் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இதே இடத்திதைச் சேர்ந்த இராசரத்தினம் செல்வராஜா (வயது-57) என்பவரது சடலமே அது என்று இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த வீதியிலுள்ள கோயிலுக்குச் சென்ற அவர் சில நாள்களுக்கு முன்னரே இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.(த-4)

## அமெரிக்க இலங்கையருக்கு உதவுமாறு பணிப்பு

கொழும்பு,நவ 1

'சண்டி' சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நாவின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். (த)



தமிழ் மன்னன் பண்டாரவன்னியனின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பண்டார வன்னியன் சிலைக்கு நேற்று மலர் மாலை சூட்டப்பட்டது. வவுனியா மாவட்ட அரச அதிபர் உட்பட ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கில் 2000 நிரந்தர வீடுகள்

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு

வவுனியா, நவ.1

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு சுமார் 2 ஆயிரம் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக் கட்ட போர் இடர்களால் இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் முற்றாகச் சேதமடைந்த சுமார் ஆயிரத்து 740 வீடுகளும், பகுதியாகச் சேதமடைந்த 296 வீடுகளும் நிரந்தர வீடுகளாக அமைக்கப்பட்டுள்ளன.

புளியங்குளம் தெற்கில் 61 வீடுகளும் புளியங்குளம் வடக்கில் 138 வீடுகளும், கனகராயன்குளம் தெற்கில் 311 வீடுகளும், கனகராயன்குளம் வடக்கில் 61 வீடுகளும், மன்னாகுளத்தில் 88 வீடுகளும், பரந்தனில் 157 வீடுகளும் சின்னடம்பனில் 148 வீடுகளும், நைனாமடுவில் 141 வீடுகளும், ஒலுமடுவில் 162 வீடுகளும் குளவிசுட்டானில் 117 வீடுகளும்

அனந்தபுளியங்குளத்தில் 46 வீடுகளும் பட்டிக்குடியிருப்பில் 34 வீடுகளும், கற்குளத்தில் 131 வீடுகளும், மாறாவிலுப்பையில் 116 வீடுகளும், நெடுங்கேணி வடக்கில் 138 வீடுகளும், நெடுங்கேணி தெற்கில் 126 வீடுகளும், மாமடுவில் 61 வீடுகளும் இவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

(க-400)

### கொட்டித் தீர்க்கிறது மழை

# தூங்க, சமைக்க முடியாமல் திணறும் புதுக்குடியிருப்பு மக்கள்

## வீட்டு வசதிகள் இல்லாததால் அவர்கள் பாடு திண்டாட்டம்

முல்லைத்தீவு,நவ.1

*முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் பருவகால மழையினால் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிம்மதியாகத் தூங்கமுடியாமலும் சமைத்து உண்ண முடியாமலும் திண்டாடி வருகின்றனர்.*

மேலும் மழை ஒழுக்கிலும் ஈர நிலத்திலும் வாழ்ந்து வரும் இவர்கள் பொது அமைப்புக்களின் உதவியை எதிர் பார்த்து காத்திருக்கின்றனர்.

போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து அகதிமுகாம்களிலும் உறவினர், நண்பர் வீடுகளிலும் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தற்பொழுது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் பெரும்பாலானவை வீட்டு வசதிகள் இல்லாத நிலையில் உள்ளன.

நிரந்தர வீடுகளும் இல்லாமல் தற்காலிக வீடுகளும் கிடைக்காமல் ஓலைக்குடிசைகளிலும், தறப்பாள் கொட்டில்களிலும் வாழ்ந்து வரும் இவர்கள் தற்பொழுது பெய்து வரும் பருவகால மழையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மழை ஒழுக்கிலும் ஈர நிலத்திலும் இருந்து வரும் இவர்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, கைவேலி, மந்துவில், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு ஆகிய இடங்களில் வாழ்ந்து வரும் மக்கள் தற்போது பெய்யும் மழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அதிகாரிகள் குழந்தைகளுக்கான போர்வைகள், உணவுப் பொருள்களை வழங்குவதற்குப் பொது நிறுவனங்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுள்ளனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து இரணைப்பாலை செல்லும் வீதி குன்றும் குழியுமாக இருப்பதனால் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் வாகனப் போக்குவரத்தும் மக்களின் நடமாட்டமும் முடங்கிக் காணப்படுகின்றன.

இரணைப்பாலை வீதியில் இரு பக்கங்களிலுமுள்ள வாய்க்கால்களிலும் வெள்ளம் வழிந்தோடுகின்றது. பிரதேச செயலக விடுதிகளைச் சுற்றியும் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணமுடிகின்றது. (க-115-400)

# வவுனியா கலைஞர்களுக்கு முதன்முறையாக ஆளுநர் விருது

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடம் தோறும் வழங்கப்படும் ஆளுநர் விருது இந்தமுறை வவுனியாவைச் சேர்ந்த நான்கு கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த கலைஞர்கள் நால்வர் முதன்முறையாக மேற்படி விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கலாபூஷணம் ம.பொ. தைரியநாதன் (இசை நாடகம்) கலாபூஷணம் க.கனகேஸ்வரன் (மிருதங்கம்), கலாபூஷணம் மணிக்குபதுகே குணதிலக (மரச்சிற்பம்), கலாபூஷணம் மொகமட் அலியார் மொகமட் சரீப் (பாரம்பரிய மருத்துவம்) ஆகிய கலைஞர்களே 2012 ஆம் ஆண்டுக்குரிய வடமாகாண ஆளுநர் விருது பெறுவதற்கு வடமாகாண கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நான்கு கலைஞர்களுக்கும் வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஏனைய வன்னி மாவட்டங்களிலிருந்து மேற்படி விருதிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களின் விவரம் மாவட்டம், துறை ரீதியாக வருமாறு:-

மன்னார் மாவட்டம்- சந்தியா அந்தோனி மர்ன்டா (நாடகம்), கிளிநொச்சி மாவட்டம் - தங்கரட்ணராசா ஜெகநாதன் (இலக்கியம்), முல்லைத்தீவு மாவட்டம் - திருமதி மயில்வாகனம் தவமணி (நாடகம்) மேற்படி விருதுகள் விரைவில் வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள வடமாகாண இலக்கிய பெருவிழாவில் வைத்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# குளங்கள் வான் பாய்கின்றன பிள்ளைகளைக் கண்காணியுங்கள்

## பெற்றோருக்கு பிரதேச செயலர் அறிவுரை

அக்கராயன், நவ.1

தற்போது பெய்துவரும் மழையைத் தொடர்ந்து குளங்கள் வான்பாயத் தொடங்கியுள்ளதால் வவுனியா வடக்கிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டுமென பிரதேச செயலர் க.பரந்தாமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மையில் தாம் வவுனியா வடக்கிலுள்ள புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பரிசங்குளத்தில் மழை வெள்ளத்தின் மத்தியில் நின்று விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறார்கள் சிலரை அங்கிருந்து கூட்டிச் சென்று புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைந்ததாகவும் கடும் மழை காரணமாக திடீரென வெள்ளத்தின் அளவு அதிகரிக்கும்போது இவ்வாறான சிறுவர்கள் உயிராபத்தைக் கூடச் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும் இந்தச் சிறுவர்களில் சிலர் பாடசாலைக்குச் செல்லாமல் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அசுத்தமான வெள்ள நீரில் சிறுவர்கள் விளையாடுவதால் வைரஸ் தொற்றுக்குள்ளாகி பல்வேறு நோய்களால் பாதிக்கப்படும் ஆபத்து இருப்பதாகக் கூறிய அவர் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

(க-18)

# மோசமான நிலையில் கள்ளிக்குளம் வீதி

வவுனியா, நவ.1

வவுனியா கள்ளிக்குளம் வீதி மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இதனூடாகப் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என்றுமில்லாதவாறு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏ-9 பிரதான வீதியில் இருந்து மாணிக்கவளவு ஊடாக கள்ளிக்குளம் செல்லும் வீதியே என்றுமில்லாதவாறு குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. மேலும் தற்போது பெய்து வரும் தொடர்மழை காரணமாக குழிகளில் மழை நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் எவையும் இடம்பெறுவதில்லை. ஆனால் வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்டு வரும் டிப்பர் ரக வாகனங்கள் இந்த வீதியூடாகத் தினமும் கிரவல் மண் ஏற்றி வருவதால் குழிகள் மேலும் சேதமடையும் நிலை காணப்படுகிறது.


**இதனால் மக்கள் கால் நடையாகச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.**

இதனால் பொதுமக்களும் மாணவர்களும் கால் நடையாகச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். இவ்வாறு செல்லும் போது வாகனங்களால் அள்ளிவீசப்படும் சேற்று நீரினால் இவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதி மக்களால் இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

(க-400)

# முள்ளிவாய்க்கால் அவலத்தைவிட இது பெரிதா...?



கரடிப்போக்குச் சந்தியில்



கிளிநொச்சி - வட்டக்கச்சி வீதியில்





இரணை மடுக் குளத்தின் கீழான வயல் நிலங்கள்

(க-6)

# மல்லாவி பொது நூலகத்தில் தேசிய வாசிப்புமாத நிகழ்வு

துணுக்காய்,நவ.1

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவி பொது நூலகத்தில் இந்த ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வு மிகவும் சிறப்புடன் இடம் பெற்றுள்ளது.

தேசிய ஆவணமாக்குதல் சபையினால் நடைமுறைப்படுத்தும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு மல்லாவி பொது நூலகத்தின் பிரதம நூலகர் வே.லவேந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மத்தியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிரதேச செயலர் எஸ்.குணபாலன் சிறப்புரையாற்றியதுடன் வெற்றியாளர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

கருத்துரைகளை யோகபுரம் மகாவித்தியாலய அதிபர் த.யோகானந்தராசா, மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் யேசுதானந்தர், படிவம் 4 அ.த.க.பாடசாலை அதிபர் இ.நிக்சன், துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் வீ.இராசரெட்ணம், பிரதி தவிசாளர் செல்வரத்தினம், துணுக்காய் பிரதேச சபை செயலாளர் மு.கிருஷ்ணநவரத்தினராஜா ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், வாசகர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுள தாக்குதல் சந்தேகநபர்களை பிடிக்கமுடியாத நிலையில் பொலிஸார்

## கல்கிஸை நீதிமன்றம் விசனம்

கொழும்பு, நவ.1

அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ணவைத் தாக்கிய சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவேண்டும் என்று கல்கிஸை பிரதான நீதிமன்ற நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஒருமாத காலமாகின்ற நிலையிலும் சந்தேக நபர்களைப் பொலிஸாரால் கைது செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச்செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு கல்கிஸை பிரதான நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் பொலிஸாருக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

தமது நீதிமன்ற அதிகாரப் பிரதேசத்தில் வைத்து நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண தாக்கப்பட்டமை மிகவும் பாரதூரமானதொரு சம்பவமாகும். இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஒருமாத காலம் ஆகும் நிலையில், சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு எதிராக விடுக்கப்படும் எந்த அச்சுறுத்தல்களுக்கும் பொலிஸார் அடிபணிந்து செயற்படக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பாக அதுல ரங்கல கருத்துத் தெரிவிக்கையில்,

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ணவைத் தாக்கிய சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. அவரது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ளவே அவர்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தொலைபேசி அழைப்பு தொடர்பான விசாரணைகள் கைவிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மஞ்சுள திலகரட்ண தாக்குதல் சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள் கூறுவதுபோல் எதுவும் நடக்கவில்லை என்றும், சந்தேக நபர்கள் தாக்குதலை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்திய வாகனம் தொடர்பில் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தர்மதாஸ பதிரண தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது கடந்த மாதம் 7ஆம் திகதி கல்கிஸையில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியமை தெரிந்ததே. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## 5 ஆட்லறிகள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

போரின் போது கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கடந்த மூன்று நாள்களாக வீசிய கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பால் வெளிக்கிளம்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிவேக வலுக் கொண்ட வெளியிணைப்புஇயந்திரம்கொண்ட படகு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் செல்வதை இராணுவத்தினர் தடுத்துள்ளதுடன் நாளை அவை மீட்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சன்-சீ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய பொது பாதுகாப்பு அமைச்சர் விக் டோயிஸ் இதனைத் தெரிவித் துள்ளார்.

இந்த அகதிகளுள் 35 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இரண்டு பேர் நாடுகடத் தப்பட்டுள்ளனர். ஒருவர் இலங்கைக்கும், மற்றையவர் இந்தியாவுக்கும் நாடுகடத்தப்பட்டனர்.

அத்துடன் 23 பேர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று கூறப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 414 பேரினதும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூவருக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒருவரும், திங்கட்கிழமை மூவரும் இனங்காணப் பட்டுள்ளனர். இதேவேளை,

மழைகாலம் என்பதால் டெங்கு பரவுவதைத் தவிர்க்க அனைவரும் தமது சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் டெங்கு குறித்து விழிப்புடன் இருக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (த-4)

## கூட்டமைப்பு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இந்தியா அளித்த வாக்கு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆட்டத்தையே மாற்றக் கூடிய நிலையில் இந்தியா இருந்தது. ஆனால், இப்போது இந்தியா எமக்குப் பின்னால் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானது என்று இந்தியாவைப் போலவே நாமும் புரிந்து கொண்டுள்ளோம்.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர், குறுகிய காலத்தில் ஆறு இந்திய அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம் எதுவும் கொடுப்பதாக நாம் உணரவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில், பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் என இந்தியா கூறுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொதுமையத்தில் வைப்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை - என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மழையால்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

னர். பூநகரி, சாமிப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 10 குடும்பங்கள் அங்குள்ள பாடசாலையில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகிறது.

நேற்றுமாலை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், இரணைமடுக்குளம் 22 அடி, அக்கராயன்குளம் 17 அடி, பிரமந்தனாறுகுளம் 8 அடி 6 அங்குலம், புதுமுறிப்புக்குளம் 14 அடி 6 அங்குலம், கனகாம்பிகைக்குளம் 10 அடி 4 அங்குலம் (வான்பாய்கிறது), வன்னேரிக்குளம் 6 அடி 9 அங்குலம் கரியாலைநாகபடுவான் குளம் 4 அடி 5 அங்குலம், குடமுருட்டிக் குளம் 6 என நீர்மட்டம் காணப்படுகிறது. நீர்வரத்து அதிகமாக இருப்பதால் நீர்மட்டம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேராறு, கனகராயன் ஆறுகள் பெருக்கெடுத்துப் பாய்வதால் இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. (ஐ-18)

## ஜனாதிபதி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஜனாதிபதியின் உத்தரவு அவசியமாகும்.

குறிப்பாக, 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10 (1) உப பிரிவுக்கு அமைய ஏதேனுமொரு மாகாணத்திற்கு முதன்முதலாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள போது அத்தகைய தேர்தலொன்றை நடத்துமாறு ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவொன்றை பிறப்பித்தல்வேண்டும்.

அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்குள் தேர்தல் ஆணையாளரால் குறித்த மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தலை வெளியிடவேண்டும் எனத் தேர்தல் சட்டத்தின் குறித்த பிரிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாண சபைத் தேர்தல் விடயத்தில் ஜனாதிபதியின் உத்தரவுக்காகத் தேர்தல் திணைக்களம் காத்திருக்கின்றது. தேர்தலொன்றை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தால் அதை நடத்திமுடிப்பதற்குத் தேர்தல் திணைக்களம் தயாராகவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

குறிப்பாக, ஏனைய மாகாணங்களுக்கு ஏற்கனவே தேர்தல்கள் நடைபெற்றுள்ளதால் பதவிக் காலம் முடிவடையும்போது அல்லது அரசமைப்பின்படி ஆளுநர் குறித்த சபையைக் கலைத்தாலே தேர்தல் ஆணையாளரால் தேர்தலுக்குச் செல்லமுடியும். இங்கு ஜனாதிபதியின் உத்தரவு முக்கியம் பெறாது.

ஆனால், வடமாகாணத்துக்கு முதன்முதலாக தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அதற்கு நாட்டின் ஜனாதிபதியின் உத்தரவு அவசியமாகும். அதேவேளை, அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கேப்பாபிலவு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தங்க வைக்கப்பட்டிருந்தன. தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையாலும், காற்றாலும் தற்காலிகக் கொட்டகைகளின் தகரங்கள் தூக்கி வீசப்பட்டன. தூவாணமும், மழைநீரும் கொட்டகைகளுக்குள் புகுந்துள்ளது.

இதனால் நாளாந்த சமையல் வேலைகளைச் செய்யமுடியாதுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். இதுவரை சமைத்த உணவுகளோ வேறு எந்தவித உதவிகளோ தமக்கு வழங்கப்படவில்லை என்று அவர்கள் மேலும் கூறினர்.

இந்த மக்களைப் பாதுகாக்க வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் சென்று தங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் அறிவித்தல் விடுத்தபோதும் தமது உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து அவர்கள் அங்கு செல்ல மறுத்துவிட்டனர்.

அத்துடன் சமைப்பதற்கு மாற்று ஒழுங்கு செய்து தருமாறு அந்தப் பகுதி கிராம சேவையாளரிடம் அவர்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்து 178 குடும்பங்களுக்கும் குக்கர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-400)

## அவசர...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு நிவாரணப் பணிகளுக்கு என்று முதல் கட்ட நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கே அதிக நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முதலில் சமைத்த உணவும், அதனை தொடர்ந்து உலர் உணவும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலாளர்கள் கோரும் நிதியை உடனுக்குடன் அனுப்ப வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எந்தசூழ்நிலைக்கும்முகம் கொடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் - என்றார். (ச)

## விவாதப்போர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வில்லை. நான்கு வருடங் களுக்கு முன்னர் இதுபோன்ற மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை அளித்த உறுதிமொழிகளுக்கு அப்பால் அங்கு அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே, இந்த மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம் என்று ஜெனிவாவில் உள்ள அரச சார்பற்ற அமைப்புக்களின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர் 'உதயனி'டம் தெரிவித்தார்.

இலங்கையில் பிரதம நீதியரசருக்கெதிராக குற்றப்பிரேரணை ஒன்று கொண்டுவரப்படுவது குறித்து நாங்கள் நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் மகஜர் ஒன்றின் மூலம் விரிவாக சுட்டிக்காட்டியுள்ளோம். நீதித் துறையில் அரசியல் கலப்பது சிறந்த ஜனநாயகத்துக்கு ஒவ்வாதது என்பதால் இந்த விடயத்தை மீளாய்வுக் கூட்டத்தின் போது பேசுவதற்கு ஐ.நா. ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் கேட்டிருக்கின்றோம் என்றும் அந்தப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

இதேசமயம் நேற்று புதன் கிழமை ஐ.நா. மனித உரிமைகள் ஜெனிவா தலைமையகத்தில் நடைபெற்ற மீளாய்வு முன்னோடிக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் இலங்கை தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்து கருத்துக்களை வெளியிட்டனர். ஜெனிவாவுக்கு வந்துள்ள இலங்கை அரசின் பிரதிநிதிகள் நிலைமையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானின் மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தின்போது கருத்து வெளியிட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பாகிஸ்தானில் மனித உரிமைகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## '13'ஐ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

13ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க இடதுசாரிகள் முன்னெடுக்கும் போராட்டங்களை நாம் நிச்சயம் முறியடிப்போம் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாகப் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இன்று குரல் கொடுத்து வருகின்றனர். அவர்களின் இந்தத் தேசத்துரோக செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்லர். தேசியப் பட்டியலினூடாக நாடாளுமன்றம் வந்தவர்கள். அமைச்சர் வாசு மட்டும் பல வருடங்களுக்குப் பின்னர் மக்கள் பிரதிநிதியாக சபைக்கு வந்தார்.

எனவே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இவர்களுக்கு நியமனம் வழங்கியுள்ளது. மேற்படி அமைச்சர்கள் அரசில் தொங்கிக் கொண்டிருப்பவர்கள்.

அரசின் கொள்கைகளை ஏற்கமுடியாவிட்டால் அதிலிருந்து வெளியேறவேண்டும். இதுதான் மானமுள்ள மனிதனுக்கு அழகு. அதனை விடுத்து அரசில் ஒட்டிக் கொண்டே அதற்கு எதிராகச் செயற்படுவது வெட்கம் கெட்ட பிழைப்பாகும்.

இவர்கள் தாமாக முன்வந்து அரசை விட்டு வெளியேறத் தவறும் பட்சத்தில் அவர்களை வெளியேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இல்லையேல் இவர்கள் அரசுக்கு எதிராகத் திரும்பும் அபாயம் உள்ளது.

அதேவேளை, மக்கள் தலைமை இல்லாத சிறுசிறு கட்சிகள் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபடுகின்றன. அக்கட்சிகளின் முயற்சிகளை நாம் மக்கள் உதவியுடன் முறியடிப்போம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதின்மூன்றாவது திருத்த விவகாரம்; விளைவு எவ்வழி செல்லும்...?

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று சன்னதம் ஆடும்கூட்டத்தில் பௌத்த மதத்தின் இரண்டு அதி உயர் பீடங்களான மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களும் சேர்ந்துகொண்டுள்ளனர்.

ஜாதிக விமுக்தி பெரமுன என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட முன்னாள் இலங்கை சேகுவேரா இயக்கத்தின் உறுப்பினராக இருந்தவரும் இந்நாள் வீடமைப்புத்துறை அமைச்சருமான விமல்வீரவன்ச, பீடாதிபதிகள் இருவரையும் சந்தித்து ஆசிபெற்ற வேளை, பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்பதனை பீடாதிபதிகள் ஆதரித்துக் கருத்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆரம்பம் முதலே, மாகாண சபைமுறைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, விருப்பு வாக்குகள் கொண்ட தேர்தல் முறை, மாகாணசபை முறை போன்றவற்றை இல்லாதொழிக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்- என்று மல்வத்த மகாநாயக்கர் கூறியுள்ளார்.

நாட்டில் பேதங்களை உண்டாக்குவதுடன் தேசிய ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் மாகாணசபை முறை, அன்றைய சூழ்நிலையில் எம்மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும். இந்தியாவிலுள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றும் எமது முழு நாட்டினை விடவும் பெரியது. அங்கு அதிகாரப் பரவல் தேவைதான். சிறிய நாடான நமக்கு அது பொருந்தாது - என்று அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழித்து விடுவதற்கான மக்கள் ஆதரவைப் பெருக்கித் திரட்டும், பகிரங்கமான, பெரும் எடுப்பிலான, அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் முதற்படி இதுவெனக் கொள்ளலாம்.

பதின்மூன்றாவது திருத்தத்துக்கு வழி வகுத்த இலங்கை- இந்திய ஒப்பந்தம் இலங்கையின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் மிகவும் முக்கியமானது என்பதை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

தற்பொழுது விடுதலைப்புலிகள் அமைப்பு அழிக்கப்பட்ட நிலையில், மாகாண சபைகள் தேவைதானா, நாட்டின் அபிவிருத்திக்கு மாகாண சபைகள் தடையாக இருக்கும் என்பதால், அவற்றை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூச்சல் எழுப்பப்படுகிறது.

அதற்கான வழிமுறைகளாக, பதின்மூன்றாவது திருத்தத்தை இரத்துச் செய்யும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றவும், எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் அரச ஆதரவுச் சக்திகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2006இல் ஒரு சாதாரண நீதிமன்றத் தீர்ப்பு மூலம் வடக்கு- கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதில் வெற்றி பெற்ற அதே சக்திகளே, தற்பொழுது அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கவும் மாகாண சபைகளை இல்லாதொழிக்கவும் முனைப்புடன் செயற்படுகின்றன.

1987இன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஓர் அனைத்துலக ஒப்பந்தம் என்று இந்தியா கருதுவதால், இந்த ஒப்பந்தம் தொடர்பாக இலங்கையில் இடம்பெற்றுவரும் அரசியல் நகர்வுகளை மிகவும் உன்னிப்பாக அது அவதானித்து வருகிறது. அதனை மனதிருத்தியே பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் உத்தேசம் இலங்கைக்குக் கிடையாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கருத்து வெளியிட்டிருந்தார்.

அதனால், இந்தியா உத்தியோகபூர்வமாக தனது நிலைப்பாட்டை வெளியிட முடியாத ஒரு சங்கடம் காணப்படுகிறது. ஆனால் இந்தியா தொடர்ந்து மௌனம் சாதிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என, விடயமறிந்த வட்டாரங்கள் உத்தியோகப் பற்றற்ற முறையில் கருத்துத் தெரிவிக்கின்றன.

பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது, இனப்பிரச்சினைத் தீர்வில் முன்னேற்றமான சில அம்சங்களைக் கொண்டிருக்கும் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை இல்லாதொழிக்கும் முயற்சி இன்று நேற்று ஆரம்பமானதல்ல. ஜே.ஆருக்குப் பின்னர் பிரேமதாச காலத்திலேயே இது ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

1988 ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஒழிக்கப்படும் என்றும் அதற்குப் பதிலாக இலங்கை- இந்திய நட்புறவு ஒப்பந்தம் என்ற பெயரில் புதிதாக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்றும் பிரேமதாச வாக்குறுதி அளித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் தாம் மக்களின் ஆணையைப் பெற்றிருப்பதாகவும் 1987 இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் ராஜீவிடம் வலியுறுத்தினார். இலங்கை- இந்திய நட்புறவு ஒப்பந்தம் குறித்தான நகல்வரைவு ஒன்றும் ராஜீவ் காந்தியிடம் வழங்கப்பட்டது.

ஆனால் ராஜீவ் காந்தி அதற்கு இணங்க மறுத்துவிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம், சர்வதேச ஒப்பந்தமாகும். தேர்தல் வாக்குறுதிகள் இதனைக் கட்டுப்படுத்த மாட்டா என்று அவ்வேளை இலங்கையிடம் காட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்று பிரேமதாசவால் முடியாமல்போன ஒன்றை விமல்வீரவன்சவும் சம்பிக்க ரணவக்கவும், அவர்களின் பின்னால் மறைந்திருக்கும் அரசாங்கமும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் ஊடாகவும், வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் நீதிமன்றம் ஊடாகவும் சாதிக்க முயற்சிக்கின்றனர்.

இதில் இவர்கள் வெற்றியடைவார்கள். ஆனால் சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழி என்ற ஏற்பாட்டுக்கும் எதிர்காலத்தில் ஆப்பு வைப்பதற்குத் தயாராவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிப்பதற்காகப் போராட்டம் நடத்துபவர்கள் அது குறித்து இனியும் இந்தியா வாய் திறக்கக் கூடாது என்று உள்ளூர எதிர்பார்க்கிறார்கள். மொத்தத்தில் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிரான இனவாதிகளின் போராட்டம், இலங்கை விவகாரங்களில் இந்தியா நேரடியாக தலையிடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு போராட்டமாகவே ஆரம்பிக்கப்படுகிறது.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்துக்காக பாரதநாடு கொடுத்த விலை அதிகம். அதனால் இது தொடர்பில் இந்தியா எந்த வழி செல்லப் போகிறது என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# நிர்ணயித்த விலைகளிலேயே பொருள் விற்பனை கட்டாயம்

### சங்கங்களுக்கு அறிவுறுத்தினார் கூட்டுறவு உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,நவ.1

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விலை நிர்ணயக்குழுவினால் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்த விலைகளுக்கே சங்கங்கள் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகத்துக்கென 21 அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயத்தைப் பயன்படுத்தியே யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நுகர்வோருக்குப் பொருள்களை விநியோகிக்க வேண்டும்.

இந்தப் பொருள்களின் விலை நிர்ணயத்துக்கெனக் குழு ஒன்றும் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, அனலைதீவு, கொடிகாமம், பண்டத்தரிப்பு, உடுப்பிட்டி போன்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கி இந்த விலை நிர்ணயக்குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு மாதாந்தம் ஒன்று கூடி பொருள்களின் விலை நிர்ணயத்தைப் பரிசீலிப்பதுடன் அது குறித்து ஆராயும்.

இந்த விலை நிர்ணயத்தை மீறி பொருள் விநியோகம் மேற்கொள்ளும் சங்கங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாகக் கோதுமை மாவின் விலை கடந்த வாரத்தில் கிலோ 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. தற்போது அதன் விலை கிலோ 87 ரூபாவாகும். இந்த விலைக்கே சகல சங்கங்களும் மாவை விற்பனை செய்யவேண்டும். - என்றார்.(த-17)

# சுகாதார சேவைக்கு புதிதாக 5 ஆயிரம் ஊழியர் இணைவர்

கொழும்பு,நவ.1

சுகாதார சேவையை மேலும் பலப்படுத்துவதற்காகப் பல்வேறு தரங்களில் 5,000 ஊழியர்களைச் சுகாதார அமைச்சு இணைத்துக் கொள்ளவுள்ளது.

சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த யோசனைக்கு அரசின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அரச வைத்திய சாலைகளில் இதுவரை அமைய ஊழியர்களாகப் பணியாற்றியுள்ள சுகாதார ஊழியர்கள் 4,000 பேரையும் அந்தப்பதவிகளில் நிரந்தரமாக நியமிப்பதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார சேவையின் சில தரங்களுக்கும் புதிதாக ஆள்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கமைய மருந்தாளர்கள் 70 பேர், பௌதிகப் பயிற்சியாளர்கள் 6 பேர், வைத்திய ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர்கள் 24 பேர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் 438 பேர் மற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பயிற்சிக்கு 545 பேரையும் இணைத்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(த-22)

## லயன்ஸ் கழக நலத்திட்டங்கள் கைதடியில் ஆரம்பம்

தென்மராட்சி,நவ.01

சர்வதேச லயன்ஸ் கழக 306டி1 மாவட்டத்தின் பிராந்தியத் தலைவர் லயன் நா.சற்குணதேவன் கைதடி லயன்ஸ் கழகத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு கழகத்தின் நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் கே.வி.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கியதுடன் கழகத்தின் மரக்கன்று நடும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

(த-9)

## அளவெட்டி கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிதாக இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.1

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான புதிய இயக்குநர் சபையின் தெரிவு கடும் போட்டிகளுக்கு மத்தியில் இடம்பெற்றது.

சங்கத்தின் 12 கிளைகளுக்கும் அண்மையில் கிளைக்குழு தேர்தல் நடத்தப்பட்டுப் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே அருந்தவநாதன் தலைமையில் பொதுச் சபை கூடியது.

பொதுச் சபை கூடியதும் முதலில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. புதிய இயக்குநர் சபைத் தெரிவிலும் பெரும் போட்டி நிலவியது.

தொடர்ந்து இந்தத் தெரிவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன் போது செல்லையா சிவயோகநாதன் தலைவராகத் தெரிவானார். உபதலைவராக எஸ்.செல்வரெத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

வி.விஜயகுலசிங்கம், நா.முருகையா, செ.செல்லத்தம்பி ஆகிய மூன்று பேரும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக வாக்கெடுப்பு மூலம் தெரிவானார்கள்.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக சு.சதீசன், கி.பிரசாந்தி ஆகியோர் வாக்கெடுப்பு இன்றிப் புதிய இயக்குநர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (த-17)

## யாழ்.மாநகரசபை கலாசாரப் பிரிவில் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.1

ஒளிவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் கலாசாரப் பிரிவினால் நடத்தப்படும் கட்டுரைப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்ட மாணவர்களிடையே நடத்தப்படும் இப்போட்டிகளில் உரியவர்கள் பங்கு பற்றுமாறு மாநகர மேயர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

(த-16)

## வங்கியியல் ஆலோசனை நிலையம் யாழ்ப்பாணத்தில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கான வங்கியியல் ஆலோசனை நிலையம் இலங்கை வங்கியினால் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க, இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் கே.தர்மசிறி, இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம்.முதியான்சே மற்றும் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.டி.சுமணசிறி உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து இந்த ஆலோசனை நிலையத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் நிலையத்தின் புதிய செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. நிதிசார் ஆலோசனைகள், சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப அறிவு போன்றவற்றுக்கான செயற்பாடுகளை வழங்குவதற்காக இலங்கை வங்கியின் கீழ் இந்த ஆலோசனை நிலையம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் இலங்கை வங்கியின் 4 விரிவாக்கல் கிளைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. கணினிமயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைக்கான அதி மேற்தரக் கிளையின் நான்காவது விரிவாக்கல் கிளை நல்லூரிலும், ஏனைய விரிவாக்கல் கிளைகள் வல்வெட்டித்துறை, உரும்பிராய், சங்கானை ஆகிய இடங்களிலும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பொலிஸுக்கு அருகிலுள்ள நகைக் கடையில் திருட்டு முயற்சி

## வீதியில் கிடந்தது பெட்டகம்



வவுனியா, நவ.1

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கந்தசாமி கோயில் வீதிக்கு அண்மித்ததாக உள்ள நகைக்கடை ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் திருட்டு முயற்சியொன்று இடம் பெற்றுள்ளது.

வவுனியா கந்தசாமி கோயிலுக்கு முன்பாக உள்ள நகைக் கடையில் வைக்கப்பட்டிருந்த நகைகளையே திருட முயற்சிக்கப்பட்டுள்ளது. கடையின் பெரிய ஆறு பூட்டுக்களை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த இரும்பு பாதுகாப்பு பெட்டகத்தை உடைக்க முயற்சி செய்துள்ளனர். முயற்சி பலிக்காமையினால் அதனைத் தூக்கி சென்று வாகனமொன்றில் ஏற்றும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். அதுவும் பயனளிக்காமையினால் வீதியின் அருகில் அந்த இரும்புப் பெட்டகத்தைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மறுநாள் காலை கடை உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு வருகை தந்த பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டனர். மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொலிஸாரின் கடும் பாதுகாப்பு, வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸாரின் பாதுகாப்பு மற்றும் இரவு நேர ரோந்தின் மத்தியில் இவ்வாறான திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளமை பொலிஸார் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் வவுனியா ரயில் நிலைய வீதியில் உள்ள மதுக்கடை ஒன்றிலும், குருமன்காட்டுச் சந்தியில் உள்ள நகைக்கடை ஒன்றிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-402,400)

# பன்றியை வேட்டை ஆடியவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம்

வலி.வடக்கு, நவ.1

சட்டவிரோதமான முறையில் பன்றியை வேட்டையாடி அதன் இறைச்சியை வைத்திருந்த இருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

ஓமந்தைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பன்றி ஒன்றை வேட்டையாடியதுடன் அதன் இறைச்சியையும் வைத்திருந்த இருவர் தகவலொன்றின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து இருவருக்கும் 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

(க-86)

# கடும் மழையால் மன்னாரில் 469 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார்,நவ.1

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக 469 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார், நானாட்டன், முசலி, மடு ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 469 குடும்பங்களே பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 737 பேருக்கான இடைத்தங்கல் முகாம் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சிலாவத்துறை-புத்தளம் பிரதான வீதியூடான போக்குவரத்தும், சங்குப்பிட்டி வீதியூடான போக்குவரத்தும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

சங்குப்பிட்டி வீதியில் தேத்தாவாடி மற்றும் பாலியாறு பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் ஏ-9 வீதியூடாகவே மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது மன்னார் மாவட்டத்தின் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கைகளில் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

# நிரம்பின கிணறுகளும் குளங்களும்

புதுக்குடியிருப்பு,நவ.1

புதுக்குடியிருப்பு பிரதேச செலர் பிரிவிலுள்ள கிணறுகளும், குளங்களும் நிரம்பி வழிகின்றன.

தேராவில் குளம், ஆனந்தபுரம் குளம், கைவேலிக் குளம், உடையார்கட்டுக் குளம் என்பன நிரம்பி வான் பாய்கின்றன.

இதேநேரம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வற்றி வரண்டு நீரின்றிக் காணப்பட்ட பல கிணறுகளும் நிரம்பி வழிகின்றன.

பல கிணறுகள் நிலமட்டத்துக்கு மேலாக நீர் நிரம்பிக் காணப்படுவதால் மக்கள் கைகளினால் நீரை அள்ளிப் பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை கைவேலி, தேராவில், மந்துவில், தேவிபுரம், வள்ளிபுனம் ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் மழைநீர் நிரம்பிக் காணப்படுகின்றது. இதனால் முளைத்த நிலையில் காணப்படும் நெற்பயிர்கள் அழியும் நிலை ஏற்படலாமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

(க-400)

# நினைவுத் தூபிகளை அமைக்க நெளுக்குளம் மயானத்தில் தடை

## வவுனியா தமிழ் பிரதேச சபையில் தீர்மானம்

வவுனியா, நவ.1

வவுனியா நெளுக்குளம் பொது மயானத்தில் நினைவுத் தூபிகள் அமைப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் க.சுபாகரன் தெரிவித்துள்ளார். நெளுக்குளம் பொதுமயானத்தை இந்து, கிறிஸ்தவ மக்கள் முழு அளவில் பயன்படுத்தும் நோக்குடன் இந்த நடைமுறை வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பொது மயானம் மூன்று துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் பயன்படுத்துவதற்கு ஒரு பகுதியும், இந்துக்களுக்கு வேறொரு பகுதியும் ஒதுக்கப்பட்டு எஞ்சிய பகுதி விளையாட்டு மைதானத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பலரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைத் தலைவரால் பிரதேசசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பிரிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சுற்றிவர மதில் அமைக்கப்படவுள்ளது. அண்மைக்காலமாக அதிகரித்து வரும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக மயானப் பகுதி பொதுமக்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் நினைவாக மயானத்தில் நினைவுத் தூபிகள் அமைக்கப்படுவதால் எதிர்காலத்தில் இறந்தவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கும் எரியூட்டுவதற்கும் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்பதற்காகவும், மதப் பாரம்பரியங்களையும் தூய்மையையும் பேணுவதற்காகவும் இந்து, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு தனித்தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-402)

# மீட்கப்பட்டது றோலர் படகு



மன்னார், நவ.1

*மன்னாரில் நேற்று முன்தினம் அதிகாலை கடும் காற்றுடன் கூடிய மழையின் போது கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டு கடலில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட றோலர் படகொன்று பலத்த சிரமத்துக்கு மத்தியில் மீட்கப்பட்டுள்ளது.*

*கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மன்னாரில் கடும் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேசாலைக் கடற்கரையில் நங்கூரமிடப்பட்ட நிலையிலிருந்த பெறுமதிவாய்ந்த றோலர் படகொன்று கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் மூழ்கியது.*

*அன்றைய தினம் மதிய வேளையில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் ஒன்று சேர்ந்து பலத்த போராட்டத்தின் பின்னர் இதனை மீட்டு கரைசேர்த்தனர். இதேவேளை, பேசாலை மீனவர்கள் பாதுகாப்புக்கருதி தமது மீன்பிடிப் படகுகளை மன்னார் பகுதிக்குக் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(க-12)*

# துணுக்காய் கால்நடை பணிமனையில் தேசிய விலங்கு உணவு தினம்

துணுக்காய்,நவ.1

துணுக்காய் பிரதேச கால்நடை வைத்திய பணிமனையில் தேசிய விலங்கு உணவு தினம் மிகவும் சிறப்புடன் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் 30 ஆம் திகதி மு.ப.10 மணியளவில் கால்நடை வைத்தியர் கஜறஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. இதில் துணுக்காய் பிரதேச செயலர் எஸ். குணபாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேற்படி தேசிய விலங்கு உணவு தினத்தில் ஒரு வகைப் புல்லினம் அறிமுகப்படுத்தப்பட்டு கால்நடைகளுக்கு ஊட்டப்பட்டது. கால்நடை உரிமையாளர்கள் இதனைத் தமது கால்நடைகளுக்கும் ஆர்வத்துடன் ஊட்டினர்.

இந்த நிகழ்வில் கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நல்லினப் புல் உற்பத்தி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மேலும் கலந்து கொண்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு புல் துண்டங்கள் சிறப்பு விருந்தினர்களால் இலவசமாக வழங்கப்பட்டன.

(க-415)

## ஒளிரும் வாழ்வினால் உதவிகள்

துணுக்காயில் இயங்கி வரும் ஒளிரும் வாழ்வு அமைப்பினால் அதன் அங்கத்தவர் ஒருவருக்கு வியாபார நிலையமொன்றை அமைத்துக் கொடுக்கும் பொருட்டு அதற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

இங்கு வசிக்கும் மாற்று வலுவுடையவரான இராஜேந்திரம் சீலன் என்பவருக்கு வாழ்வாதார உதவியாகவே இந்த வியாபார நிலையம் அமைத்து வழங்கப்படவுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 261 அங்கத்தவர்களைக் கொண்டு இயங்கும் ஒளிரும் வாழ்வு அமைப்பு மாற்று வலுவுடையோருக்குப் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

# கட்டுப்படுத்தப்படாத நிலையில் கட்டாக்காலி கால்நடைகள்

## கண்டாவளைப் பகுதியில் பயிர்கள் அழிவு

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகள் நெற்பயிர்களை அழித்து வருகின்றன. ஆனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய கமக்கார அமைப்பினர் இது விடயத்தில் அக்கறை காட்டவில்லை எனவும், இந்த அமைப்பைச் சேர்ந்த அங்கத்தவர்களது கால்நடைகளே அதிகளவில் காணப்படுகின்றன எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலிகளாகத் திரியும் இத்தகைய கால்நடைகளால் தமது செய்கைகள் அழிவடைந்து வருவதால், தாம் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-6)

# தமிழரின் சொத்துக்கு நேர்ந்த கதி...



*[illegible] போரின்போது கைவிடப்பட்ட சைக்கிள்கள் புதுமாத்தளன் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் பின்புறத்தில் குவிக்கப்பட்டிருப்பதையும் இவற்றின் ஒருபகுதி டிராக்டரில் ஏற்றப்பட்டு எடுத்துச் செல்வதையும் காணலாம்.*

*(க-400)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சிறைச்சாலைக்கான நிரந்தர கட்டடத்தை அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழைக்கு மத்தியிலும் கட்டட நிர்மாணப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

### வடமராட்சியில் கடும் மழையால்

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடன் நிவாரணம் வழங்குங்கள்

வடமராட்சி, நவ.1

கடந்த பத்து நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை, கடும் காற்று காரணமாக தொழில்களை இழந்துள்ள வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு யாழ். அரச அதிபரிடம் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடுங்காற்று, அடைமழை காரணமாகக் கடற்றொழில் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த தொடைமானாறு, ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி உள்ளிட்ட கரையோரங்களைச் சேர்ந்த 2,000 குடும்பங்கள் தொழிலுக்குச் செல்லாது, தொழில் இழந்து கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் ஆதிகோயிலடிப் பகுதியில், கரையோரமாக வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கடும் காற்று, மழைவெள்ளம் காரணமாக வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மண்டபத்தில் இரவு நேரங்களில் தஞ்சம் அடைகின்றனர்.

இவர்களில் பலர் அன்றாடம் ஜீவனோபாயத் தொழிலை மேற்கொண்டவர்கள். ஆதலால் அவர்கள் ஒருநாள் தொழிலுக்குச் செல்லாவிட்டாலும்கூட கஷ்டமான ஒரு நிலையை அனுபவிப்பதை என்னால் காணமுடிகின்றது.

எனவே அந்த மக்களின் துயரங்களைப் போக்கும் வகையில் புயல் அபாயம், மழைவெள்ளம் ஆகியவை குறைந்து மீண்டும் கடற்றொழிலுக்குச் செல்லும் வரை அவர்களுக்குத் தற்காலிகமாக நிவாரண உதவிகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் குடும்பங்களின் அவலநிலையைப் போக்கி உதவுமாறு அவர் அரச அதிபரிடம் கோரியுள்ளார். (த-8)

# வீதி புனரமைக்கும் இடங்களில் அபாயக் குறியீடுகளைக் காணோம்

## விபத்துக்களுக்கு இதுவே காரணம்

யாழ்ப்பாணம்,நவ.1

பிரதான வீதி அகலிப்பு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்ற போதும் வீதிகளில் அபாய எச்சரிக்கை குறியீடுகளோ, இரவு நேர எச்சரிக்கைச் சமிக்ஞைகளோ பொருத்தப்படாமையால் பாதசாரிகளும் வாகனங்களும் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தின் பிரதான 4 வீதிகளும் அகலமாக்கப்பட்டு 'காப்பெற்' இடப்பட்டு வருகின்றன. இதன்போது பாலங்களும் உடைக்கப்பட்டு மீளக் கட்டப்பட்டு வருகின்றன.

பாலங்களின் ஒரு பக்கம் முதலில் உடைக்கப்பட்டுத் திருத்தப்படும் போது வாகனங்கள் மறுபக்கத்தால் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் பாலம் திருத்தப்படும் பகுதியில் குறியீட்டு விளக்குகளோ, எச்சரிக்கைச் சமிக்ஞைகளோ பொருத்தப்படாமை காரணமாக அப்பகுதிகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மழை நேரங்களில் , பாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும், சேவைகள் பூரணப்படுத்தப்படாமல் இருப்பதாலும் பொதுமக்கள், பாலத்தின் மறுகரையால் பயணிக்கும் போது தவறி வீழ்ந்து விபத்துக்குள்ளாகின்றனர்.

இரவு நேரங்களில் எச்சரிக்கை விளக்குகள் எதனையும் ஒளிர விடாமையால் பொதுமக்கள் பாலத்தின் திருத்த வேலைகள் இடம்பெறும் பகுதிகளை இனம்காண்பதற்குச் சிரமப்படுவதுடன் அதில் தவறி விழும் நிலையும் ஏற்படுகிறது.

திருத்த வேலைகளை மேற்கொள்கின்ற ஒப்பந்த நிறுவனங்கள், பாலத் திருத்த வேலைகள் மேற்கொள்ளும் போது மேற்படி எச்சரிக்கை விளக்குகளைப் பொருத்துவதற்கும் ஒப்பந்தத்தில் நிதி ஒதுக்கப்படுகின்ற போதும் அதனை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பில் வீதி அகலிப்பு வேலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள திட்டப் பணிப்பாளரிடம் கேட்டபோது,

நாம் ஒப்பந்த நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விளக்குகளைப் பொருத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம். ஆனால் அவர்கள் நடைமுறைப்படுத்தத் தவறுகின்றனர்-என்றார்.

இந்த விடயம் தொடர்பில் வீதி அகலிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனப் பொறியியலாளர்களிடம் கேட்டபோது, தாம் எச்சரிக்கை விளக்குகளைப் பொருத்த அவற்றைச் சிலர் களவாடிச் செல்கின்றனர். அதனால் தமக்கு மேலதிக செலவினம் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர். (த-5)

## சட்ட விரோத மதுபானம் விற்றவர்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்,நவ.1

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த மற்றும் 21 வயதுக்குட்பட்டவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த 7 பேருக்கு 29 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதுவரித் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து அரச சாராயத்தை விற்பனை செய்த 3 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இவர்கள் இருபாலை, அரியாலை பகுதிகளில் வீடுகளில் வைத்துச் சாராயத்தை விற்பனை செய்ததை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கண்டறிந்தனர்.

அத்துடன் 21 வயதுக்குட்பட்டவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த யாழ். வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் 4 பேருக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட 7 பேருக்கு எதிராகவும் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது 29 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (த-14)

## காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

### காரைநகர் வர்த்தக நிலையங்களில்

காரைநகர், நவ.1

காரைநகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட காலாவதியான பொருள்கள் பல அழிக்கப்பட்டதுடன் அதிகளவான திகதி காலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் பகுதி வர்த்தக நிலையங்களைச் சோதனையிட்டபோது அங்கு காணப்பட்ட திகதி காலாவதியான பிஸ்கட், பால்மா வகைகள் உள்ளிட்ட பலபொருள்கள் உடனடியாக அழிக்கப்பட்டன.

அதிகளவில் காலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்த புதுவீதி, சக்கலாவோடை பகுதிகளைச் சேர்ந்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-250)

## சுகவாழ்வு சிகிச்சைக்கு மக்களை இணைக்க ஏற்பாடு

தென்மராட்சி, நவ.1

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும் சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவுக்கு மக்களை இணைக்கச் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் முடிவு செய்துள்ளனர்.

ஒவ்வொரு குடும்ப நல சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலிருந்தும் தலா இருவர் வீதம் சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

சுகவாழ்வு சிகிச்சையில் மக்களை இணைக்கும் செயற்றிட்டத்தில் ஒவ்வொரு குடும்ப நல சேவையாளர் பிரிவிலிருந்தும் 35 வயதுக்குமேற்பட்ட பொதுமக்கள் இருவரையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் நடத்துவோரில் இருவரையும் வராந்தம் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்புவதெனவும் முடிவு செய்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் நோயற்ற சமுதாயத்தை உருவாக்கவென ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தை மேம்படுத்த பிரதேசத்தில் உள்ள அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவோரும் பங்குபற்றத் திணைக்களத் தலைவர்களைக் கோரவும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தின் இந்த முன் மாதிரியான செயற்றிட்டத்தை அனைத்துப் பிரதேசங்களிலும் நடைமுறைப் படுத்தினால் யாழ். மாவட்டத்தில் நோயற்ற சமுதாயத்தை உருவாக்கலாமெனச் சமூக ஆர்வலர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது. (த-9)

## கிராமிய வங்கிச் செயற்பாடு நெல்லியடிச் சங்கத்தில்

யாழ்ப்பாணம்,நவ.1

கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிராமிய வங்கியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் இதன் மூலம் அதிக பலன் அடைந்துள்ளனர் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார். இந்தக் கிராமிய வங்கிக்கெனச் சங்கத்தின் கட்டடம் ஒன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் கிராமிய வங்கிச் செயற் ாடுகள் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நவீன வசதிகளுடன் இந்தப் புதிய கட்டடம் புனரமைக்கப்பட்டுக் கிராமிய வங்கியின் பயன்பாட்டுக்கென வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் வசதி கருதி கிராமிய வங்கியில் புதிய சேவைகளை விரைவில் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள்

யாழ்ப்பாணம்,நவ.1

கசிப்பு உற்பத்தி யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்தவர்களே இந்த வருடம் இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த வருடங்களை விட இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. எனினும் தீவகப் பகுதிகளில் ஆங்காங்கே கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றன. மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து தீவகப் பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனால் இந்த வருடம் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யும் வர்த்தகர்களே அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் அதிகமானோர் யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர்கள் மத்தியில் புகைத்தலைக் கட்டுப்படுத்தவே மதுவரித் திணைக்களத்தினால் 21 வயதுக்குட்பட்டவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இவற் றைக் கருத்தில் கொள்ளாது வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் சிகரெட் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை புகைப்பொருள் விற்பனை செய்யாத 85 வர்த்தகர்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவுக்குச் சென்ற பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவர் பேகம் கலிதா ஷியா புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தைச் சந்தித்துப் பேசினார்.

## கல்பாக்கம் அணு நிலையம் புயலை எதிர்கொள்ளத் தயார்

கல்பாக்கம், நவ.1

சென்னைக்கு அருகே நீலம் புயல் கரையைக் கடக்கும் நிலையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு குறித்து சூழலியல் ஆர்வலர்களால் கேள்வி எழுப்பப்பட்டு இருந்தது. இந்நிலையில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டிருப்பதாக கல்பாக்கம் அணுமின்நிலையத்தலைவர் பிரபாத்குமார் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி மூலமாக கருத்துத் தெரிவித்த அவர், கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முக்கிய கருவிகள் அனைத்தும் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. வீதிகளில் மரங்கள் விழுந்தால் அப்புறப்படுத்தவும் மின்விநி யோகத்தில் ஏற்படும் தடைகளை அகற்றவும் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ராட்சத அலைகள் எழுந்தாலும் 160 கிலோ மீற்றர் வேகத்துக்கு காற்று வீசினாலும் அணுமின் நிலையம் பாதுகாப்பாகவே இருக்கும் -என்று கூறியுள்ளார். (வ)

## 25 விரல்களுடன் 4 வயதுச் சிறுவன்



இயற்கைக்கு மாறுபட்ட வகையில் கை, கால்களில் 25 விரல்களைக் கொண்ட சிறுவன் ஒருவன் மத்திய பிரதேசம் போபாலில் வளர்ந்து வருகிறான்.

அர்பன் சக்சேனா என்ற பெயருடைய இந்த சிறுவன் பிறக்கும்போதே இயற்கைக்கு மாறுபட்ட வகையில் அவனுடைய கை, கால்களில் விரல்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்ததென அவனது தாயார் கருணா தெரிவிக்கிறார். குறித்த சிறுவனின் இடதுகையில் 6 விரல்கள் உள்ளன. அதிலும் பெரு விரல்கள் இரண்டு இரண்டாக இரு கைகளிலும் ஒட்டியிருக்கின்றன.

இவை தவிர வலது கையில் குட்டியாக ஒரு விரலும் உள்ளது. இதேபோல் அவனுடைய இரு கால்களிலும் 6 விரல்கள் கணக்கில் 12 விரல்கள் இருக்கின்றன. இதுகுறித்து அந்தச் சிறுவன், தன்னை மற்றவர்கள் புகைப்படம் எடுக்கும்போது சந்தோஷமாக இருக்கிறது என்றும் ஆனால் காலணி அணிந்து கொண்டு நடக்க முடியாதுள்ளதாகவும் அவன் கவலையுடன் தெரிவித்தான்.

# தமிழகத்தில் நிலை கொண்ட 'நீலம்'

### கன மழையுடன் பலத்த காற்று



சென்னை, நவ.1

'நீலம்' புயல் சென்னைக்கு தென்கிழக்கே 180 கிலோ மீற்றர் தொலை விலும் கடலூருக்குத் தென் கிழக்கே 140 கிலோ மீற்றர் தொலை விலும் மையம் கொண்டிருக்கிறது. சென்னை உள்ளிட்ட தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 40 கிலா மீற்றர் வேகத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது

வங்கக் கடலில் சென்னைக்கு 500 கிலோ மீற்றர் தொலைவில் உருவெடுத்த குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. இதற்கு 'நீலம்' என்றும் பெயரிடப்பட்டது. அந்தமான் தீவுகள் கடற் பரப்பில் உருவான இந்த புயல் இலங்கையின் திருகோணமலைக்கும் சென்னைக்கும் இடையே மையம் கொண்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு தொடர்ந்து இதுவேகமாக நகர்ந்து நேற்றுக் காலை சென்னைக்கு தென்கிழக்கில் 320 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்தது. நேற்று பிற்பகல் இது சென்னைக்கு தென்கிழக்கில் 180 கிலோ மீற்றர் தொலை விலும் கடலூருக்கு தென்கிழக்கே 140 கிலோ மீற்றர் தொலை விலும் நெருங்கி இருந்தது.

**8 ஆம் எண் புயல் கூண்டு**

சென்னை மெரினா கடற்கரையின் மணற்பரப்பு முழுவதையும் சீறிவரும் கடலலைகள் ஆக்கிரமித்துள்ளன. சென்னை துறைமுகத்தில் 8ஆம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டிருக்கிறது. சென்னை துறைமுகத்தின் இடதுபக்கமாக புயல் கரையைக் கடக்கும் என்பதுடன் சென்னை துறை முகத்துக்குக் கடுமையான பாதிப்பு இருக்கும் என்பதால் 8ஆம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டிருக்கிறது. சென்னை, எண்ணூர் துறை முகத்தில் 6இன் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

புதுச்சேரி- நெல்லூர் இடையேசென்னைக்குஅருகே கரையைக் கடக்க இருக்கும் புயல் கரையைக் கடக்கும் போது 90 - 100 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நீலம் புயல் கரையை நெருங்க நெருங்க கடலில் அலைகள் ஆக்ரோஷமாக எழும்பி மிரட்டிக் கொண்டிருந்தன. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லக் கூடாது என்று நேற்றும் ஏற்கனவே எச்சரிக் கப்பட்டிருக்கிறது. நீலம் புயலால் சென்னை நகரின் பல பகுதிகளில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் முற்றிலுமாக துண்டிக்கப்பட் டுள்ளது. மின்சார சபையினர் உஷாரான நிலையில் வைக்கப் பட்டிருக்கின்றனர். (வ)

அவதூறு வழக்குத் தொடர்பில்

## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கருணாநிதிக்கு அழைப்பாணை

தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது தொடரப்பட்டுள்ள அவதூறு வழக்கில் அவர் நேரில் முன்னிலையாக அழைப்பாணை அனுப்புமாறு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் கோகுல இந்திரா பற்றி தவறான தகவல் வெளியிட்டதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது அவதூறு வழக்குத் தொடரப்பட்டது.

அதில் கடந்த ஓகஸ்ட் 23 ஆம் திகதி முரசொலி நாளிதழில் கோகுல இந்திராவின் கணவரே அமைச்சரின் அரசு பணிகளைச்செய்வதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதனால் முரசொலி நாளிதழின் ஆசிரியர் செல்வம் மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த சென்னை முதன்மை நீதிமன்ற நீதிபதி பொன். கலையரசன், கருணாநிதி எதிர்வரும் டிசெம்பர் 18 ஆம் திகதி நேரில் முன்னிலையாக அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது இதுவரை மொத்தம் 6 அவதூறு வழக் குகள் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

சொத்துக் குவிப்பு வழக்கில்

## நேரில் வாக்குமூலம் சசிகலாவுக்கு உத்தரவு



சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சசிகலா முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி சோமராஜு முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வழக்குத் தொடர்பான ஆவணங்களை 21 நாள்களுக்குப் பார்வையிட உச்ச நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி அளித்திருந்தது.

இதில் விடுமுறை நாள்களைத் தவிர்த்து வார நாள்களில் ஆவணங்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தால் சான்றளிக்கப்பட்ட தீர்ப்பின் நகலை, சசிகலா தரப்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி மணிசங்கர் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பில் சட்டத்தரணிகள் கந்தசாமி, அசோகன், செந்தில் ஆகியோர் முன்னிலையாகினர். அரசுத் தரப்பில் சட்டத்தரணி பானு பிரகாஷ் முன்னிலையாகினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி சோமராஜு, ஆவணங்களை விடுமுறை நாள்கள் தவிர்த்து வார நாள்களில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் எதிர்வரும் 17ஆம் திகதிவரை பார்வையிட அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

ஏற்கனவே மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த சட்டத் தரணிகள் அவர்களுக்கு உதவி செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

## பரமகுடியில் மூவர் படுகொலை

மறைந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் குருபூசை நாளான நேற்று முன்தினம் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே நிகழ்ந்த மோதல்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

முத்துராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் மற்றும் இறந்த நாளான நேற்று முன்தினம் அவரது சொந்தக் கிராமமான பசும்பொன்னில் மாநிலத்தின் பல பகுதிகளி லிருந்தும் வரும் முக் குலத்தோர் குழுமி அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அஞ்சலி தினத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தமிழக அமைச்சர்கள், சட்ட சபைஉறுப்பினர்கள்என அனைவரும் கலந்து கொண்டனர்.

பொதுவாகவே தென் மாவட்டங்களில் தலித் மக்களுக்கும் முக்குலத்தோருக்கும் இடையே பதற்றமான சூழல் நிலவுவதால், வெளியிடங்களிலிருந்து குருபூஜைக்காக பசும்பொன் செல்வதற்கு எந்தெந்தப் பாதை வழியாகச் செல்லலாம் என்பதை வழமையாக முன்னதாகவே பொலிஸார் அறிவித்திருந்தனர்.

ஆனால் அதைக் கருத்தில் கொள்ளாமல் விருத்தாசலத்திலிருந்து சென்ற வாகனம் ஒன்று தலித் கிராமங்கள் செறிந்த பகுதி வழியே சென்றபோது பாம்பு விழுந்தான் என்ற கிராமத்தில் மோதல் நடைபெற்றிருக்கிறது.

வாகனத்தில் இருந்த பயணிகள் தப்பிவிட்டனர். ஆனால் அதன் சாரதி கொல்லப்பட்டார். அதேபோல முதுகுளத்தூரிலிருந்து இருசக்கர வாகனத்தில் சென்ற இருவர் பொன் னையாபுரம் கிராமத்தில் அடித்துக்கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகள் தொடர்பாக 15 பேர் கைதாகியுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. (வ)

### இந்திரா காந்தியின் 28 ஆவது நினைவுதினம் நேற்று

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 28 ஆவது நினைவு தினம் நேற்று டில்லியில் நினைவு கூரப்பட்டது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்திராகாந்தியை நினைவு கூரும் வகையில், ஒலிப்பதிவு செய்யப்பட்ட அவரது உரையும் இந்த நினைவு நிகழ்வில் இடம் பெற்றது. (வ)

## ஹஸாரேயின் கருத்துக்கு மம்தா ஆதரவு

கொல்கத்தா, நவ.1

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை கலைத்து விட்டு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற அன்னா ஹஸாரேவின் கருத்தை திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி ஆதரித்துள்ளார்.

மும்பையில் கடந்த திங்கட்கிழமை பத்திரிகையாளர்களைச் சந்தித்த சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே மற்றும் இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதி ஆகியோர் கூட்டாக பேட்டி அளித்தனர். அப்போது, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று இருவரும் தெரிவித்தனர்.



இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, ஐ.மு., கூட்டணி அரசு பெரும்பான்மை பலத்தை இழந்துள்ள நிலையில் பிரதிநிதித்துவம் மிக்க அரசாகத் தான் செயற்படுகிறது. எனவே மத்தியில் ஆட்சி செய்யும் அதிகாரம் ஐ.மு.கூட்டணிக்கு இல்லை-என்றார்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் போர்க்கப்பல்கள் சூடானில்

## இஸ்ரேலைத் தாக்கும் முஸ்தீபா?

தெஹ்ரான்,நவ.1

ஈரானிய கடற்படையினர் சூடானில் நிலைகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அயல்நாடுகளில் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணும் செய்தியுடன் அவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈரானிய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை சூடானில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையில் நிகழ்ந்த தீ விபத்துக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று அறிவித்தது.

சூடானில் கார்தோம் நகரின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஆயுதத் தொழிற்சாலையில் அண்மையில் இரண்டு தடவை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.



தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்வதாகக் கருதி மேற்படி தொழிற்சாலை மீது இஸ்ரேல் குண்டு வீசியதாக சூடான் குற்றம் சாட்டியது. இதற்கு இஸ்ரேல் எவ்விதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே சூடானின் நட்பு நாடான ஈரான் 2 போர்க் கப்பல்களை அனுப்பி உள்ளதாகவும் அவை சூடானின் செங்கடல் பகுதி யில் உள்ள துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தப்பகுதியில் தீவிரவாத செயல்கள் மற்றும் கடற்கொள்ளையர்களை ஒடுக்கவே போர் கப்பல்களை அனுப்பி வைத்திருப்பதாகவும், 2 நாட்டு தளபதிகளும் விரைவில் சந்தித்துப்பேச இருப்பதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இஸ்ரேலை மிரட்டவே ஈரான்- சூடான் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

சூடானின் நட்பு நாடான ஈரான் 2 போர்க் கப்பல்களை அனுப்பி உள்ளதாகவும் அவை சூடானின் செங்கடல் பகுதியில் உள்ள துறைமுகத்தில் நிறுத் தப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## பாகிஸ்தான் நாடாளுமன்றம் ஜனவரியில் கலைப்பு

பாகிஸ்தான் நாடாளுமன்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் கலைக்கப்பட உள்ளது.பாகிஸ்தானில் தற் போது கூட்டணி ஆட்சி இடம் பெறுகின்றது. ஜனாதிபதியாக ஆசிப் அலி சர்தாரியும், பிரதமராக ராஜா பர்வேஷும் உள்ளானர்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் 2013 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதனடிப்படையில், அந்த நாட்டு தேசிய சபை மற்றும் மேல்சபை ஆகியவற்றை எதிர்வரும் ஜனவரி 16 அல்லது 17 ஆம் திகதிகளில் கலைக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களது பதவிக்காலம் நிறைவடைய இன்னும் 60 நாள்களே உள்ளன. (வ)

## நாஜிக்களால் கொல்லப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடு

பேர்ளின்,நவ.1

ஜேர்மனியில் நவீன நாஜிக்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு 80 ஆயிரம் யூரோ இழப்பீடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜேர்மனியில் நவீன நாஜிக் குழுவினர், பொதுமக் களில் 10 பேரை சுட்டுக் கொன்றனர். மேற்படி நாஜிக் குழுவினர் தேசிய சமதர்ம இரகசிய அமைப்பு என்ற பெயரில் செயற்பட்டு பல கொலைகளைச் செய்து வந்தனர்.

அவர்கள் 2000 ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை புலம் பெயர்ந்து வந்து தொழில் செய்து கொண்டிருந்த பத்துப் பேரையும் பெண் அதிகாரி ஒருவரையும் சுட்டுக் கொன்றனர்.

இந்தநிலையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க சட்ட அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 10 ஆயிரம் யூரோவும், உடன் பிறந்தவர்களுக்கு 5 ஆயிரம் யூரோவும் மற்றும் அவர்களது இறுதி சடங்குகளுக்கும் பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)



அல்ஜீரியா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனை வரவேற்று அழைத்துச் செல்லும் அந்தநாட்டு ஜனாதிபதி அப்துலாசிஸ் பவுடீபிகா.

## அமெரிக்காவை தாக்கிய 'சான்டி'யை விண்வெளியிலிருந்து பார்த்தார் சுனிதா

அமெரிக்காவைத் தாக்கிய "சான்டி" புயலை சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் சுனிதா வில்லியம்ஸ் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சுனிதா நேற்று முன்தினம் அனுப்பிய தகவலில்-

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபோது அமெரிக்காவின் கடற்கரைப் பகுதியில் சுழல் போல் சுற்றியபடி புயல் மையத்தையும், அதன் சுழலையும் தாங்கள் பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தங்கள் குடும்பத்தினர் வசிக்கும் பகுதியில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்ததாகவும் அவர் கூறியுள்ளார். (வ)

## பாகிஸ்தான் இராணுவத்துக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சி



பாகிஸ்தான் இராணுவத்துக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சி செய்தது தற்போது தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்துக்குள் ஊடுருவி அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு ஹிஸ்புத் தாஹ்ரிர் என்ற தீவிரவாத அமைப்பு 3 முறை முயற்சி செய்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

குறித்த அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக, பாகிஸ்தான் இராணுவ பிரிகேடியர் அலிகான், மேஜர் சோஹைல் அக்பர், ஜாவத் பஷீர், இனாயத் ஆசிஷ், இஃப்திகார் ஆகிய 5 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை இடம்பெற்றது.

இதுதொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில் 5 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு 18 மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதுவரை பாகிஸ்தான் இராணுவத்துக்குள் ஹிஸ்புத் தாஹ்ரிர் தீவிரவாத அமைப்பினர் 2003, 2009, 2011 ஆகிய ஆண்டுகளில் 3 முறை இதேபோன்று ஊடுருவல் முயற்சி மேற்கொண்டார்கள் என்று பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டான் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் பாகிஸ்தானில் இஸ்லாமியப் பழைமைவாத அரசை நிறுவ முயற்சிப்பதாக அந்த அமைப்பின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (வ)

## கனடாவில் மீண்டும் நிலநடுக்கம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 7.7 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக சுனாமி தாக்கலாம் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுபின் வாபஸ் பெறப்பட்டது.

இருப்பினும் ஹவாய் தீவில் சுனாமி போன்று ராட்சத அலைகள் எழுந்தன. இந்தநிலையில் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

குறித்த நிலநடுக்கம் 6.3 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. (வ)

## பிரிட்டனில் பொலிஸ் தலைமையகமான ஸ்கொட்லண்ட் யார்ட் கட்டடம் நிதி நெருக்கடியால் விற்பனைக்கு

கடுமையான நிதி நெருக்கடியால் உலகப்புகழ் பெற்ற பிரிட்டனிலுள்ள ஸ்கொட்லண்ட் யார்டு பொலிஸ் தலைமையகம் விற்பனை செய்யப்பட உள்ளது.

பிரிட்டனின் மிகப் பெரிய உலகப் புகழ்பெற்ற ஸ்கொட்லண்ட் பொலிஸ் அமைப்பு 1960 ஆம் ஆண்டு முதல் மத்திய லண்டனில் விக்டோரியா நகரில் உள்ள தலைமை அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தற்போது கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. பிரிட்டன் அரசும் நிதி ஒதுக்க மறுத்து விட்டதால், தற்போது இந்த ஆண்டு வரவு செலவு அறிக்கைச் செலவினமாக 500 மில்லியன் அதிகரித்துவிட்டது.




இதனால் நிலைமையை சமாளிக்க முடியாமல் 2015 ஆம் ஆண்டுக்குள் இதனை ஒட்டு மொத்தமாக விற்றுவிட ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## வானொலி அறிவிப்பாளரை உயிருடன் தீயிட்டு கொளுத்திய மர்ம ஆசாமிகள்

பொலிவியாவில் நேரடி வானொலி நிகழ்ச்சி யொன்றை நடத்திக் கொண்டிருந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் மீது மர்ம நபர்கள் தீ வைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பொலிவியாவின் யாகுய்பாவின் தென் நகரில் நேரடி வானொலி நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது வானொலி நிலையத்துக்குள் புகுந்த நபர்கள், நிகழ்ச்சி அறிவிப்[illegible] பெர்னாண்டோ விடல் என்பவர் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்தனர்.




முகத்திலும், கைகளிலும் நெஞ்சுப் பகுதிகளிலும் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் பெர்னாண்டோவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பெர்னாண்டோவிடம் கடத்தல் தொடர்பான அறிவிப்பு ஒன்றைச் செய்து கொண்டிருந்தபோதே தாக்குதலுக்கு உள்ளானதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாண்டியின் கோரம்: சுதந்திரதேவி சிலைக்கு மீண்டும் மூடுவிழா



'சாண்டிப் புயலின் தாண்டவத்தால் அங்குள்ள சுதந்திர தேவி சிலை மீண்டும் மூடப்பட்டுள்ளது.

மன்ஹட்டான் நகர மத்தியில் அமைந்துள்ள அமெரிக்கர்களின் வரலாற்றுச் சின்னமான சுதந்திர தேவி சிலை அண்மையில்தான் புனரமைக்கப்பட்டது. அதுவரைக்கும் மூடப்பட்டிருந்த குறித்தசிலை பணிகள் முடிவடைந்து கடந்த ஞாயிறே திறக்கப்பட்டது.

ஆனால் தற்போது 'சாண்டி' புயலின் கோரத் தாண்டவம் காரணமாக சுதந்திர தேவி சிலை மறுபடியும் முடப்பட்டுள்ளது.

30 மில்லியன் டொலர் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகள் காரணமாக இது கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டிருந்தது.

151 அடி உயரமுள்ள குறித்த சிலை புயலின் சீற்றம் தணிந்தால் நாளை திறக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

# அல்ஜீரியாவுக்கு அமெ. அழுத்தம்

### மாலியில் ஆபிரிக்கா தலைமையிலான தலையீட்டை அடுத்து

மாலியில் ஆபிரிக்கா தலைமையிலான இராணுவத் தலையீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிராந்தியத்தில் அதிகாரமிக்க நாடான அல்ஜீரியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

அமெரிக்க வெளி விவகாரச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் அல்ஜீரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், மாலி நெருக்கடி தொடர்பாக அல்ஜீரியா மீதான அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

நாட்டின் வட பிராந்தியத்தின் பெரும்பாலான பகுதிகளை அல்குவை தாவுடன் தொடர்புடைய ஆயுததாரிகள் கைப் பற்றியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் மாலியில் சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து நாட்டின் வட பிராந்தியத்தின் பெரும்பாலான பகுதிகளை அல்குவைதாவுடன் தொடர்புடைய ஆயுததாரிகள் கைப் பற்றியுள்ளனர்.

மாலியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் நிலையில் தமது நாட்டின் தென்பிராந்தியத்தில் அல்குவைதா ஆயுததாரிகள் மீண்டும் செயற்படும் நிலை ஏற்படும் என்று அல்ஜீரியா அச்சம் வெளியிட்டுள்ளது. (வ)

## பஹ்ரெய்னில் ஆர்ப்பாட்டம் நடத்த அந்தநாட்டு அரசு தடை

பஹ்ரெய்னில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கும் சட்டவிரோதமாக ஒன்று கூடுவதற்கும் அந்த நாட்டு அரசு மீண்டும் தடை விதித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களை அடுத்து, அரசு மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

நாட்டில் அமைதியைத் தோற்றுவிக்கும் நோக்கில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பஹ்ரெய்னின் உள்விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு பஹ்ரெய்ன் அரசுக்கு எதி ரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமானது முதல், அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மேற்படி தடைகள் மூலம் மக்களின் சுதந்திரம் கேள்விக்குறியாகியுள்ளதுடன், மனித உரிமைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது. (வ)

## இந்தோனேஷியப் பெண்கள் மலிவு விலைக்கு விற்பனை

### இணையத்தள விளம்பரத்தால் சர்ச்சை

இந்தோனேஷியப் பெண்கள் விற்பனைக்கு உள்ளனர் என்று மலேசிய இணையத்தளத்தில் வெளியான விளம்பரத்தால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, பாகிஸ்தான் உட்பட நாடுகளைச் சேர்ந்த பெண்கள் மலேசியாவில் வீட்டு வேலை செய்கின்றனர்.

அவர்கள் தங்கள் முதலாளிகளால் அதிக கொடுமைகளுக்கு ஆளாவதாக ஏற்கனவே தகவல் வெளி-யாகி இருந்தது.

இந்தநிலையில் மலேசியாவைச் சேர்ந்த சிலர் இணையத்தளத்தில், வீட்டு வேலை செய்யும் இந்தோனே ஷியப் பெண்கள் விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளனர்.

60 ஆயிரம் ரூபா செலுத்தினால் போதும், நீங்கள் சமைக்க வேண்டியதில்லை, வேலை ஏதும் செய்யாமல் ஓய்வெடுக்கலாம் என்ற வாசகம் அடங்கிய விளம்பரத்தை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு இந்தோனேஷிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், மலேசியாவில் உள்ள இந்தோனேசியத் தூதர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சுப்பிரமணியத்தைச் சந்தித்து சர்ச்சைக்குரிய வகையில் விளம்பரம் வெளியிட்டுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தியுள்ளார். (வ)


## ஆப்கன் ஜனாதிபதித் தேர்தல் 2014 இல்

காபூல், நவ.1

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று தற்போதைய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில், 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகளின் தாக்குதலால் தலிபான்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டது. அதன்பின், ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட்டு ஹமீத் கர்சாய் இரண்டு முறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்சியை இழந்த தலிபான்கள் அடிக்கடி தாக்குதல் நடத்துவதால், அமெரிக்க படைகள் 2014 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானில் தங்கியிருக்க ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.



வெளிநாட்டுப் படைகள் வாபஸானதும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று ஆப்கானிஸ்தான் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு, நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது அதிகளவில் முறைகேடு இடம் பெற்றதாக வெளிநாட்டுப் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

எனவே 2014 ஆம் ஆண்டு தேர்தலில் வெளிநாட்டுப் பார்வையாளர்களை அனுமதிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (வ)


## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பொ.அரவிந்தன் அவர்கள் 02.10.2012 அன்று ஜனாதிபதியின் அலரி மாளிகையில் அதிபர் தரம் 02-II பெற்றமையையிட்டு வாழ்த்துவதோடு, அவர் சகல வளங்களையும் பெற்று, மேன்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்றுசிறப்புடன் வாழ வாழ்த்தி நெல்லண்டடை ஸ்ரீபத்திரகாளி வீரமாகாளியம்மன், வடபத்திரகாளியம்மன் திருவருள்பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**ஸ்ரீமான் பொன்னையா அரவிந்தன்**
B.Sc, Dip.in Ed, M.Ed,(SLPS Gr 02-II)

**சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள்**
(B.A..Dip.in Eed.. M.A)
நெல்லண்டை பத்திரகாளியம்பாள் வீரமாகாளியம்மன், வடபத்திரகாளியம்மன் பிரதமகுரு, நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை,

[24943][5-6]





**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**
**WALK –IN- INTERVIEW**

Walk –In- Interview for appointments to the following posts will be held on **06.11.2012** at **2.00.p.m** at the board Room of this University.

Candidates who have the required qualifications are invited for walk in Interview with self prepared applications for the posts mentioned below:-

**Post of Temporary Lecturer** in Financial Management/ Human Resource Management/ Accounting / Marketing

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26,020/- p.m. (Fixed) |

Interested Candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and self prepared application.

Registrar
University of Jaffna.

(சி/4387)(5-6)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

தன்னை உளியாக்கி நற்சமுதாயமதை
செவ்வனே செதுக்கிய சிங்கார சித்திரமே!
அளவற்ற -நல் கல்விச் சேவைதனை
அவனிக்கு கொடுத்து ஆனந்தமாய் வாழ்ந்துவிடு

கடந்த 09.10.2012 அன்றைய தினம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட நல்லாசிரியருக்கான '**பிரதீபா பிரபா**' விருதினைப் பெற்றுக் கொண்டஎமது பாடசாலை ஆசிரி *திருமதி சித்திரா இரஞ்சித்குமார்* அவர்களை நீண்ட காலம் சிறப்புடன் சேவை செய்ய பாராட்டி வாழ்த்துவதோடு, மீள்குடியமர்த்தப்பட்டு எட்டு மாதங்களில் இந்த வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த

அதிபர்
ஞா.ஜெபநேசன்





ஆசிரியர்
செ.மதனரூபன்


பே.கில்ஷன் (162)


செ.பிரவீனா (152)


அ.ஜீனுஜன் (145)


றெனாட் டொறின்ரன்(145)

ஆகிய மாணவர்களையும் *100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட யோ.சாளினி, கா.நிந்துஷா, சி.விதுர்சனா, ஞா.யதுர்ஷா, செ.செலஸ்ரீனா, இ.டர்சிகன் ஆகியோரையும் பாடசாலை அதிபர் ஞா.ஜெபநேசன் மற்றும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் செ.மதனரூபன்* அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்

வாழ்த்துவோர்:
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.புதுக்குடியிருப்பு.**

[சி/4388][5-6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(22)

விஞ்ஞானி பேசி முடிக்கும் தறுவாயில் அவர் நண்பர் அங்கு வந்தார். விஞ்ஞானி தன் நண்பரிடம் எழுத்தாளரைப் பற்றிப் பெருமையுடன் சொன்னார். ''இவர் ஒரு பெரிய எழுத்தாளர். இவர் புத்தகங்கள் ஏராளமாக விற்பனையாகின்றன. இவர் பேசுவதில் மகா வல்லவர். இவர் பேச்சை நான் இவ்வளவு நேரம் ரசித்துக் கொண்டிருந்தேன்''.

ஒன்றும் பேசாவிட்டால் கூட, மற்றவர்கள் பேசும் போது காது கொடுத்துக் கேட்பவர்கள் நல்ல பேச்சாளர்கள் என்று கருதப்படுகிறார்கள்.



எப்போதும் நாம் மற்றவர்களைப் பேச விட வேண்டும். அவர்கள் பேசும் போது, அவர்கள் பேசுவதைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக ஒரு சில கேள்விகளைக் கேளுங்கள். அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

நமக்குத் தெரிந்த ஒரு விடயத்தைக்கூட மற்றவர்கள் பேசும் போது கேட்க வேண்டும். நம்மைவிட அவர்களுக்கு அந்த விடயம் மிகவும் குறைவாகவே தெரிந்திருக்கலாம். ஆனாலும் நாம் குறுக்கிட்டு அவர்களை மட்டம் தட்டிப் பேசக்கூடாது.

ஒருவன் பேசிக்கொண்டே போனால், பெரும்பாலும் அவன் தன்னைப் பற்றியே பேசுவான். அவன் படிக்காதவனுக்குச் சமம். அவன் எவ்வளவுதான் படித்திருந்தாலும், அவன் அறிவு வளரவில்லை என்றே பொருள். நாம் அமைதியாக அவன் சொல்வதைக் கேட்கும் போது, உண்மையில் நாம் மிக உயர்ந்து விடுகிறோம்.

நமக்கு நண்பர்கள் வேண்டுமானால், மற்றவர்களைப் பேச வைக்க வேண்டும். நமக்கு எதிரிகள் வேண்டுமானால், நாம் அதிகமாகப் பேச வேண்டும் என்பது பிரெஞ்சுப் பழமொழி.

நமது நெருங்கிய நண்பர்கள் கூட, அவர்களுடைய சாதனைகளையும், வெற்றிகளையும் நம்மிடம் அளக்க வேண்டும் என்றே நினைப்பார்கள். நாம் அதிகமாகப் பேசுவதை அவர்கள் விரும்புவதில்லை.

**தாழ்வு மனப்பான்மையா? வேண்டாமே**

தாழ்வு மனப்பான்மை கொண்டு ஒதுங்குபவர்கள் பிறரது நன்மதிப்பைப் பெற முடியாது.

நமது மனத்தில் எத்தனையோ ஆசைகள் தோன்றுகின்றன. அவைகளை நாம் அடைய முடிவதில்லை. அப்போது நமக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது.

ஒருவன் நினைக்கிறான். ''நானும் தான் பி.ஏ.பட்டம் பெற்றேன். முதல் வகுப்பில் தேற முடியவில்லை, எதிர் வீட்டு எத்திராஜ் முதல் வகுப்பில் தேறி விட்டானே''

இது ஒரு வகை தாழ்வு மனப்பான்மை.

''எனக்கும் தான் வேலை கிடைத்தது. என்ன சம்பளம்? 600 ரூபாய். பக்கத்து வீட்டுப் பலராமன் 1000 ரூபாய் சம்பாதிக்கிறான். எவ்வளவு வித்தியாசம்?''

இப்படி ஒரு தாழ்வான மனப்பான்மை.

''என்னிடம் சைக்கிள் இருக்கிறது. என்னுடன் படித்த மாதவனுக்கு மோட்டார் சைக்கிள் இருக்கிறது. வெட்கக்கேடு'' என்று எண்ணுகிறான் மற்றொருவன்.

''எனக்கு எவ்வளவு படிப்பு இருந்தும் பயன் என்ன? எடுப்பான தோற்றம் வேண்டாமா?'' என்பது மற்றொரு வகை தாழ்வு மனப்பான்மை.

இப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மைகளுக்கு இடம் தருகிறவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க முடியாது. மேலும் ஏதாவது ஒரு வகையில் மற்றவர்களை மிஞ்ச வேண்டும் என்ற தவறான கருத்தை மனத்தில் கொண்டு, வெறி பிடித்தவர்களைப் போல் சில செயல்களைச் செய்வார்கள்.

சிகரெட் பிடிக்கத் தொடங்குவார்கள், சாதாரண சிகரெட் அல்ல. நீண்ட சிகரெட்டுகளைப் பற்ற வைப்பார்கள். நீண்ட சிகரெட்டுகளைப் பிடிப்பதால், மற்றவர்களை மிஞ்சி விட்டதாக இவர்கள் மனத்தில் ஓர் எண்ணம் ஏற்படும். அவர்களுக்கு தாம் பெரிய மனிதர்கள் ஆகிவிட்டதாக எண்ணம் ஏற்படும்.

கியூபா ஒரு குட்டி நாடு. அமெரிக்கா 'ப்பூ' என்று ஊதினால் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிடும். ரஷ்யாவின் பக்க பலத்துடன் கியூபா அமெரிக்காவை எதிர்த்து வருகிறது. கியூபாவின் சர்வாதிகாரி காஸ்ட்ரோ தாழ்வு மனப்பான்மையைப் போக்கவே எப்போதும் பெரிய அளவு சுருட்டு ஒன்றைப் பிடிக்கிறார் என்று ஒரு நிபுணர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

தமிழ்வாணன்

(தொடரும்)

# வாழ்வெழுச்சித் திட்டத்தின் பயனை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்

## 'திவிநெகும' நிகழ்வில் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம்,நவ.1

வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஊடாக கிடைக்கும் உதவிகளைக் கொண்டு அதன் பயனை மக்கள் உரிய முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் நான்காம் கட்ட ஆரம்ப நிகழ்வு அண்மையில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மரக்கறிக் கன்றுகளின் விதைகளை நட்டு வைத்தும், பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்களை வழங்கி வைத்தும் உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வழங்கப்படும் மரக்கறி விதைகள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிடைக்கிறது. வீட்டுத் தோட்டச் செய்கைகளை முன்னெடுத்து,போஷாக்குமிக்க பயிர் வகைகளை உற்பத்தி செய்யுங்கள். சுயதொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட உபகரணங்களைக் கொண்டும் உங்களது வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இது மக்களுக்குக் கிடைத்த சிறந்த திட்டமொன்று. யாழ். மாவட்ட மக்கள் தமது முயற்சிகளினூடாக தம்மை வளப்படுத்திக் கொண்டு இந்த மாவட்டத்தை பொருளாதாரத்தில் மேம்பாடடைந்த மாவட்டமாக உயர்த்திக்கொள்ள வேண்டும்-என்றார். (எ-7)



கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 30 மாணவர்களுக்கு அண்மையில் பாதணிகள் மற்றும் சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. கோப்பாய் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிறுவனத்தின் போசகர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா மாணவி ஒருவருக்கு பாதணிகளை வழங்குகிறார்.

# வாழ்க்கையைத் தீர்மானிப்பவை எண்ணங்களும் செயற்பாடுகளுமே

## கோவிற்குளம் இந்துக் கல்லூரி நிகழ்வில் உரை

வவுனியா,நவ.1

எண்ணங்களும் செயற்பாடுகளுமே வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. நீ யாராக இருந்தாலும், நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும் உழைப்பில் எண்ணியது வந்து சேரும்.

ஒருவருடைய நல்லெண்ணங்களே அவருக்கு நல் வாழ்க்கையைத் தருகின்றன. தீய எண்ணங்கள் தீய வாழ்க்கையைத் தரும். இதையே வள்ளுவரும்-''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்'' எனக் கூறியுள்ளார். எனவே மாணவர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று வவுனியா கோவில்குள இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.சிவஞானம் தெரிவித்தார்.

வவுனியா கோவில் குளம் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆசிரிய தின வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றில் உங்களுக்கு என்று ஒரு பக்கத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். உங்களது குடும்ப பின்னணி எவ்வாறு இருப்பினும் உங்களது எண்ணங்களும், செயற்பாடுகளும் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன.

பிழையான வழிகளில் செல்லாமல் நல் வழியில் செல்லுங்கள். உங்களது வாழ்க்கையை நீங்களே அமைத்துக் கொள்ளுங்கள். என்னாலும் சாதிக்க முடியும் என்ற எண்ணக் கருவை வளர்த்துக் கொள்ளுங்கள். அதனை உங்கள் இலட்சியமாக்குங்கள். வெற்றி உங்கள் பக்கம்-என்றார்.

(எ-402)

# ஆங்கில தின போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,நவ.1

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டியின் ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**தரம்-10**

ம.தரன்ஜா-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பு.கஜீனா-மானிப்பாய் மகளிர் கல்லூரி, பா.மச்சாயினி-உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம்-11**

[illegible]-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, [illegible] வாணி-மானிப்பாய் மகளிர் கல்லூரி, தே.இலக்கியா-உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம்-12**

சி.கிறேசி அஞ்சலின்-உடுவில் மகளிர் கல்லூரி, த.விஜிதா- உடுவில் மகளிர் கல்லூரி, எ.துவாரகன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**தரம் 13**

கமலினி மில்ஸ்-உடுவில் மகளிர் கல்லூரி, இ.கீர்த்தனா-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, செ.சாருஜா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ந.சரண்ஜா-வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

(எ-86)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை,நவ.1

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர மகளிர் பாடசாலையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றவர் விவரம் வெளி வந்துள்ளன.

**2 ஆம் வகுப்பு (ஆண்)**

1 ஆம் இடம்-ம.விஷ்ணுகன்-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், 2ஆம் இடம்-யோ.ஆர்நிகன்-நெல்லியடி மெ.மி.த.க.பா, 3 ஆம் இடம்-ஸ்ரீ.அஞ்சனன்-தொண்டமானாறு வீரகத்தி ம.வி.

**2 ஆம் வகுப்பு (பெண்)**

1 ஆம் இடம்-ந.நிவேதா-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், 2ஆம் இடம்-கு.நிவேதா-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், 3 ஆம் இடம்-சி.மதுசாயினி-தம்பசிட்டி மெ.மி.த.க.பா.

**3 ஆம் வகுப்பு (ஆண்)**

1 ஆம் இடம்-செ.நிவேரகன்-உடுப்பிட்டி அ.மி.க.பா, 2ஆம் இடம்-செ.சஜிந்தன்-தம்பசிட்டி மெ.மி.த.க.பா, 3 ஆம் இடம்-தி.அபிசேக்-நெல்லியடி மெ.மி.த.க.பா.

**3 ஆம் வகுப்பு (பெண்)**

1 ஆம் இடம்-த.தர்ஷிகா-துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பா, 2ஆம் இடம்-பா.செம்பூவினி-நெல்லியடி மெ.மி.த.க.பா, 3 ஆம் இடம்-மு.வைஷ்ணவி-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.

**4 ஆம் வகுப்பு (ஆண்)**

1 ஆம் இடம்-பா.மனோஜ்-நெல்லியடி மெ.மி.த.க.பா, 2ஆம் இடம்-இ.விதுஷன்-தம்பசிட்டி மெ.மி.த.க.பா, 3 ஆம் இடம்-தி.கஜன்-வல்வை மகளிர் வித்தியாலயம். (எ)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு பிரகாசமான எதிர்காலம்

19 விரிவாக்கற் காரியாலயங்கள் கிளைகளாக தரமுயர்த்தப்பட்டு நொவம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்படும்.


வல்வெட்டித்துறை


சங்கானை


யாழ்ப்பாணம் பஸ் நிலையம்


யாழ்ப்பாணம் பிரதான வீதி


கைதடி


கொடிகாமம்


உரும்பிராய்


பளை


கொக்குவில்


பரந்தன்


மல்லாவி


பூநகரி


வவுனியா நகரம்


மன்னார்


புதுக்குளம்


பேசாலை


பூவரசங்குளம்


நானாட்டான்


தலைமன்னார்

யாழ்ப்பாண மாவட்டம்
கிளிநொச்சி மாவட்டம்
முல்லைத்தீவு மாவட்டம்
மன்னார் மாவட்டம்
வவுனியா மாவட்டம்

உங்களது மேலதிக வசதிக்காக, இலங்கை வங்கியானது வடக்கில் உள்ள அதன் 19 விரிவாக்கற் காரியாலயங்களை சகல வசதிகளையும் கொண்ட கிளைகளாக நொவம்பர் மாதத்தில் தரமுயர்த்தவுள்ளது.

முதல் நடவடிக்கையாக 2012 நொவம்பர் 1ல் நான்கு விரிவாக்கற் காரியாலயங்கள் கிளைகளாக தரமுயர்த்தப்படும்

*வாருங்கள், எம்முடன் வைப்புச் செய்யுங்கள்!*

591 கிளைகள்/ விரிவாக்கற் காரியாலயம் | 436 ATMகள் | 857 வெளிநாட்டு தொடர்பிலான நிலையங்கள் | 24 x 365 தலைமை அலுவலகக் கிளை | 24 x 7 அழைப்பு நிலையம் | நடமாடும் தொலைபேசி வங்கிச் சேவை | இணையதள வங்கிச் சேவை | SMS எச்சரிக்கை சேவை | SME நிலையங்கள் | முதன்மை நிலையம்

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

அழைப்பு நிலையம் (+94) 011 220 4444

Fitch Rating AA+ (lka)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர வியாபாரத்துறையினருடன் வெற்றிகரமான நீண்டபயணம்



வாடிக்கையாளர் பயிற்சி நிகழ்ச்சி - மட்டக்களப்பு



சிறிய நடுத்தர தொழில் நிலையம் திறப்பு விழா புத்தளம்



வடக்கில் மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்



வடக்கில் மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்




உங்கள் வசதிக்கேற்ப வங்கியியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

## இலங்கை வங்கி நல்லூர் விரிவாக்கற் காரியாலயம்

**பருத்தித்துறை, யாழ்ப்பாணம் (நல்லூர் கோவிலுக்கு எதிரில்)**

என்ற முகவரியில் 2012 நொவம்பர் மாதம் 01ம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

www.boc.lk | தலைமை அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+ (lka)

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வடக்கில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் பிரகடனப்படுத்துவதுடன், புதிதாக ஈட்டப்பட்ட சமாதானத்தையும், சாந்தியையும் கொண்டாடுகின்றது

## யாழ்ப்பாணம் சிறிய, நடுத்தர வியாபார முயற்சி (SME) வங்கிச்சேவை அலகு

**2012 நொவம்பர் 01 அன்று**
**இல.754, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்**
**சிநவி வங்கிச்சேவை அலகு**
**திறந்து வைக்கப்படுவதை அறிவிப்பதையிட்டு**
**நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.**







*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !*

சிநவி வங்கியியல் பிரிவு, இலங்கை வங்கி தலைமை அலுவலகம், கொழும்பு 01 தொ.பேசி: 011 2204560
வட மாகாண அலுவலகம்: 021 2223126

591 கிளைகள்/ விரிவாக்கற் காரியாலயம் | 436 ATMகள் | 857 வெளிநாட்டு தொடர்பிலான நிலையங்கள் | 24 x 365 தலைமை அலுவலகக் கிளை | 24 x 7 அழைப்பு நிலையம் | நடமாடும் தொலைபேசி வங்கிச் சேவை | இணையதள வங்கிச் சேவை | SMS எச்சரிக்கை சேவை | SME நிலையங்கள் | முதன்மை நிலையம்

www.boc.lk | தலைமை அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+ (lka)

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை என்பது....!

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். ஒருவர் ஒருநாள் அவரைத் தேடி வந்தார்.

''ஐயா... நான் கடவுளை பரிபூரணமாக நம்புகிறேன்!'' என்றார்.

''சரி.... அந்த நம்பிக்கை உனக்கு எப்படி வந்தது?'' என்றார் பெரியவர்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

''ஐயா...! எனக்குத் திருமணம் ஆகி 10 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் குழந்தைப் பாக்கியம் இல்லை. அதற்கு என்ன காரணமாக இருக்கும் என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது, நண்பர் ஒருவர் ஆலோசனை ஒன்று சொன்னார். ''உனக்கு மதப்பற்று இல்லை... எந்தக் கடவுளையுமே நம்ப மாட்டேன் என்கின்றாயே! அதுதான் காரணம்! கடவுளை நம்பு... உனக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்! என்றார்.

அவர் அப்படிச் சொன்னாரே தவிர... எனக்குச் சந்தேகம் தான்... இருந்தாலும் அவர் சொன்னபடியும் நடந்துதான் பார்ப்போமே... என்று முடிவு பண்ணினேன். கடவுளை நம்ப ஆரம்பித்தேன். அந்த வருடமே அழகான ஆண் குழந்தை பிறந்தது... எல்லாம் இறைவன் அருள்!'' என்றார்.

அவர் இப்படிச் சொன்னதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் சொன்னார். ''நீ சொல்வதெல்லாம் சரிதான்'' இருந்தாலும் இந்தக் காலத்தில் எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அதை, சோதனை செய்து பார்த்திட்டுத்தான் ஒரு முடிவுக்கு வரவேணும்.!

அறிவு பூர்வமான முடிவு அதுவாகத்தான் இருக்கும். அறிவியல் சோதனைகள் அப்படித்தான் ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி எத்தனை தடவை சோதனை செய்தாலும் ஒரே முடிவுதான் கிடைக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். அதனாலே இப்ப மறுபடியும் ஒரு சோதனை'' என்றார்.

''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் அவர்.

''கடவுளிடம் ஒரு பெண் குழந்தை வேணும் என்று கேள். முதலில் ஆண் குழந்தையைக் கொடுத்தது மாதிரியே இப்ப ஒரு பெண் குழந்தையையும் கொடுக்கிறாரா பார்க்கலாம்!'' என்றார். சரி என்று சொல்லி இவர் அதேமாதிரி முயற்சி செய்தார். அதன்பின்னர் அவர் இந்தப் பெரியவரிடம் வரவே இல்லை.

சிறிதுகாலம் கழித்து அவரே அந்தப் பெரியவரைத் தேடிக் கொண்டு போய் அவரது வீட்டுக் கதவைத் தட்டினார். அவர் கதவைத் திறந்தார்.

''என்ன நடந்தது...'' கடவுள் கண் திறந்தாரா? என்று கேட்டார்.

அவர்.... ''அந்த விடயம் எல்லாம் எமக்கு வேண்டாம் ஐயா. முதல் தடவை அது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட ஒரு சாதகம். இப்போது நீங்கள் இரண்டாவது தடவை சொன்ன பின்னர் தினமும் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தேன் ஒன்றும் நடக்கவில்லை'' என்றார் மிகவும் விரக்தியாக.

''ஒரே ஒரு தோல்வியிலேயே உங்கள் நம்பிக்கை எல்லாம் பறந்து போய்விட்டது பார்த்தீர்களா? என்றார் அந்தப் பெரியவர்.

எல்லாம் நல்லவிதமாக நடக்கும் வரைக்கும் நம்பிக்கை! எதிர்பார்த்தது தோல்வியிலேயே முடிந்து விட்டால் அவ நம்பிக்கை! மற்றவர்கள் மேல் வைக்கும் நம்பிக்கை எந்த நேரத்திலேயேயும் விவகாரமாகி விடக்கூடிய சாத்தியம் உண்டு. நாம் நம்பிக்கை வைக்க வேண்டியது எங்களிடம்தான். உண்மையான கடவுள் பக்தி நிபந்தனையற்ற நம்பிக்கையாக அது இருக்க வேண்டும்.

''எல்லாம் நல்லபடியாக நடைபெற்றால் எந்த முட்டாளுக்கும் நம்பிக்கை வரத் தான் செய்யும்!'' என்கிறார் ஓசோ.

''தியானத்தின் மூலமாக உனக்குள் ஆழமாகத் தோண்டினால் உன் அடியாழத்தில் நம்பிக்கை ஊற்றைக் காண்பாய்! என்கிறார் அவர்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நெடுந்தீவு மன்னன் சேகராசசேகரன் போற்றும் மருந்து மாமலை வனம்





லக்ஸ்மன்

நெடுந்தீவின் வரலாறு நீண்டகால வாழ்வுக்கு பெயர்பெற்ற மக்களைக் கொண்டிருந்த ஒரு தீவு என்பதால் ஏனைய இடங்களில் உள்ளவர்களுடன் ஒப்பிடும் போது அங்குள்ளவர்களுக்குப் பெருமையாக இருந்துள்ளது. உலகில் ஏற்படக்கூடிய உபாதைகளைத் தீர்க்கும் சக்திவாய்ந்த மூலிகைகள் நிறைந்திருப்பதே அதற்குக் காரணமாகும்.

நற்சிந்தில், பொற்சிந்தில் உட்பட ஆயுள்வேத மருத்துவத்திற்கான முக்கியத்துவம் மிக்க மூலிகைகள் ஆதிகாலம் தொட்டே அங்கு காணப்படுகின்றன. நூற்றி இருபதுக்கும் அதிகமான மூலிகைகள் அங்கு உள்ளன.

ஒரு சிறந்த வைத்தியராக விளங்கிய செகராசசேகரன் என்ற மன்னன் நெடுந்தீவை 'மருந்து மாமலை' எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் சரித்திரம் சொல்கிறது. அவுசதபோகய என்பது சிங்கள மக்களின் கூற்று. மருத்துவத் தன்மைகள் நிறைந்த இத்தீவின் மக்கள் நோய் நொடியின்றி நீண்டகாலம் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்றாளர்களின் குறிப்பாகும். இங்கே 160 வயதுடைய மூதாட்டி ஒருவர் இருந்துள்ளார். இன்னொருவரின் பெயர் சின்னச்சி. இவர் நூறு வயது வரை வாழ்ந்துள்ளார்.

குஞ்சாச்சி என்பவர் 110 வயது வரை திடகாத் திரமிக்க நோய் நொடி நெருங்காத முதியவர்களாக வாழ்ந்தவர்களில் ஒருவராவர். இவர்களுக்குப் பின்னால் இருந்த வம்சத்தவர்கள் மூலிகைப் பயன்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்தியதாக இல்லைபோலும். தற்போதைய வம்சத்தை நலிவுற்றவர்களாகவே குஞ்சாச்சி கருதியுள்ளார். அவர்களைத் தன்னுடைய காலத்து இளம் வயதுடையவர்களோடு ஒப்பிட முடியாது என்பது அவரது கூற்று. சின்னச்சி அவரது வயதுக்கு ஒத்த வயதுடையவராகக் காணப்பட்டாலும் சுருக்கங்கள் ஏற்பட்டு குந்தியிருந்தால் எழும்ப முடியாதவராக இருந்துள்ளார். அவர் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகள் தவிர அதற்கு முன்பு யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள தனது உறவினர்களைப் பார்ப்பதுண்டாம். இங்குள்ள மக்களின் நீண்டகால வாழ்விற்கு மூலிகைகள், பசும் பால், பனம் பண்டங்களே காரணம் எனக் கூறும் வரலாற்றாசிரியர் பசெற் என்பவர் குடவிலியைச் சேர்ந்த குஞ்சுக் கிழவியும் பரியாரி சின்னச்சியும் நூற்றி இருபது முதல் நூற்றி நாற்பது வயது வரை இருந்துள்ள தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

> **அநுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்துக் கொண்டு இலங்கா புரியை நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் அந்த மலையில் இருந்து நெடுந்தீவின் மேல் ஒரு துண்டு விழுந்தது. அதனால் அங்கு மூலிகைகள் நிறைந்து காணப்ப டுகின்றது. சஞ்சீவி மலையில் இருந்து விழுந்த துண்டே நெடுந்தீவு என்றும் ஐதீகக் கதைகளில் இந்தப் பிரதேசம் பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த மூலிகைகளே.**

நூற்றி நாற்பது வயதுவரை வாழ்ந்து முப்பது வருடங்களுக்கு முன் காலமானவர் நாகப்பர் கார்த்திகேசு. தான் மூலிகைகளுடன் வாழ்ந்தவன் என்று கூறிப் பெருமிதமடைவதுண்டு. இவர்களைப் போன்று அனேகர் இவ்வாறு நீண்ட ஆயுளுடன் வாழ்ந்துள்ளனர்.

அநுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்துக்கொண்டு இலங்காபுரியை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் அந்த மலையில் இருந்து நெடுந்தீவின் மேல் ஒரு துண்டு விழுந்தது. அதனால் அங்கு மூலிகைகள் நிறைந்து காணப்படுகின்றது. சஞ்சீவி மலையில் இருந்து விழுந்த துண்டே நெடுந்தீவு என்றும் ஐதீகக் கதைகளில் இந்தப் பிரதேசம் பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த மூலிகைகளே. நெடுந்தீவின் பெரும்பகுதி குடிசனமற்ற நிலப்பரப் பாகும் .

இங்குள்ள காடுகளில் தும்பை, தூதுவளை, விணலை. முடக்கொத்தான் எனப் பெருமளவு மூலிகைகள் காணப்படுகின்றன.

ஒரு சமயம் மக்கள் அவற்றை நிரம்பவே எடுத்துவந்து தமது உணவுக்குப் பயன்படுத்தியதுடன் கற்றாளை போன்ற செடிகளைப் பயன்படுத்தி உடலில் ஏற்படக்கூடிய நோய் மற்றும் சில உபாதைகளுக்காக அவற்றை வாட்டி எடுத்து அவற்றில் கட்டுப்போடுவதுண்டு. ஆயுள்வேதச் சிகிச்சையுடன் இவை ஒன்றியதால் வெளி இடங்களில் இருந்து இங்கு வந்த ஆயுள்வேத வைத்தியர்கள் இங்கு கிடைக்கக்கூடிய மூலிகைகளைப் பிடுங்கி எடுத்துச் செல்லும் நிலை சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் தினமும் இடம்பெற்று வந்தது. இந்த மூலிகைகளுடன் பனைசார் உணவுப் பொருள்களும் மக்களின் நோயற்ற வாழ்வுக்கு பண்டைக்காலத்தில் முக்கிய காரணியாக இருந்துள்ளது.

இன்று அந்த வாழ்க்கை முற்றாக மாறிவிட்டது. ஒரு சிலர் மாரி காலத்தில் காட்டுப் பகுதிகளுக்குச் சென்று மருத்துவ சக்தி நிறைந்த இவற்றை எடுத்து வருகின்ற போதும் பெரும்பாலானவர்கள் குறிப்பாக இளந்தலை முறையினர் இவைகள் குறித்து அக்கறை காண்பிப்பதில்லை.

எமது பண்டைய உணவுப் பாரம்பரியங்களில் இருந்து முற்றாக விடுபட்டுச் செல்கின்றனர். இன் றைய மக்களுக்கும் உள்ளூரில் காணக்கூடிய மூலிகைகளுக்குமான இடைத்தூரம் நீண்டு கொண்டு செல்லக் காடுகளில் கிடைக்கக் கூடிய இந்த மூலிகைகள் இப்போது கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இதனாலேயே இங்குள்ள கால்நடைகள் கொழுப்புத் தன்மை குறைந்து காணப்படுவதுடன் அவற்றின் இறைச்சியும் சுவையாக உள்ளது.

நெடுந்தீவுக்கு வருகை தந்த போர்த்துக்கேயத் தளபதி அல்போன் கே.டீ.சூசா அங்குள்ள ஆடுகளைத் தமது உணவுக்காகப் பிடித்து வெட்டிய போது அவற்றில் கோரோசனை இருக்கக் கண்டு வங்காளத்தில் இருந்து வரும் தமது கப்பல்கள் நெடுந்தீவில் நங்கூரமிட்டே பயணத்தைத் தொடர வேண்டும் என ஏற்பாடு செய்திருந்தான்.

நிறைந்த மூலிகைகளைக் கொண்ட இத்தீவு சிறந்த ஆயுள்வேத பரியாரிமாரைக் கொண் டிருந்தது. இன்று மூலிகைகளின் பயன்பாடு மறக்கப்பட்டு ஆயுள்வேத வைத்தியமும் அருகிவிட்டது. அரசு நெடுந்தீவில் ஓர் ஆயுள்வேத வைத்திய சாலையையும் மூலிகைத் தோட்டத்தையும் அமைக்க பத்து வருடங்களுக்கு முன் தீர்மானித்தது. அவற்றை அமைப்பதற்கென நிதி ஒதுக்கீடும் செய்திருந்தது. எனினும் அதன் தேவையையும் அவசியத்தையும் புரிந்து கொள்ளாதவர்களின் தவறினால் இரண்டுமே நிறுத்தப்பட்டு நிதி மீளவும் திரும்பிச் சென்றது.

கைநழுவிப்போன இந்தப் பயன்பாடுகள் மிகவும் கிடைக்க வாய்ப்புக்கள் திரும்பியுள்ள நிலையில் இன்றைய இளம் தலைமுறை மூலிகைகளது முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் புரிந்து கொண்டால் இருதயம் பற்றிக் கவலைப் படுவதற்கில்லை என்ற பண்டைக் காலக் கூற்று இந்தக் காலத்திற்கும் ஏற்புடையதாக அமையும் என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை பள்ளிவாசல் தீக்கிரையாகும் வரை மஹிந்தவுடன் ஒட்டியிருக்கப் போகிறது மு.கா.?

## சூடாக கேள்வி கேட்கிறார் கூட்டமைப்பு எம்.பி. அரியம்

எருவில்,நவ.1

எத்தனை பள்ளிவாசல்கள் இன்னும் தீக்கிரையாகும் வரை மஹிந்த அரசுடன் ஒட்டியிருக்கப் போகின்றது முஸ்லிம் காங்கிரஸ்? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது:-

நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களைத் துன்புறுத்தும் வகையில் அரசின் ஆதரவுடன் விஷமிகள் காட்டுமிராண்டித்தனமான செயல்களைப் புரிந்து வருகின்றனர். அந்தவகையில் திருகோணமலையில் மாதா சொரூபம் ஒன்று உடைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களின் புனிதத்திருநாளான ஹஜ் நாளன்று அநுராதபுரத்தில் பள்ளிவாசல் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் இடம்பெற்று வருகின்றபோதும் முஸ்லிம் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றோம் என்று கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இன்னமும் சேர்ந்துதான் இருக்கின்றது.

இதிலிருந்து முஸ்லிம் காங்கிரஸின் பதவி ஆசை அரசியலை முஸ்லிம் மக்கள் விளங்கிக்கொள்வார்கள்.



அநுராதபுரத்தில் பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டு இரண்டு நாள்களுக்குப் பின்னர்தான் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார். பள்ளிவாசலுக்குத் தீ வைத்தவர்களை அரசு கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினரிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். அதாவது இன்னும் எத்தனை பள்ளிவாசல்கள் தீக்கிரையாகும்வரை மஹிந்த அரசுடன் ஒட்டியிருக்கப் போகின்றது முஸ்லிம் காங்கிரஸ்? இந்தக் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.-என்றார். (ச-31)

## சுழன்று வீசியது காற்று; பறந்தது வகுப்பறை கூரை



கல்முனை,நவ.1

கல்முனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வீசிய கடும் காற்றினால் கல்முனை கிறீன்பீல்ட் றோயல் வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடமொன்றின் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டன.

இது தொடர்பில் அப்பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.ரி.தௌபீக்கின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து, பாடசாலைக்கு வருகைதந்த வலயக் கல்விப் பணிப்பாளர் நிலைமையை நேரில் பார்வையிட்டதுடன் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளை தொடருவதற்கு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வதாகக் கூறினார். (ச)

## திருமலை மழையால் பாதிப்பு; பார்வையிட்டார் கிழக்கு முதல்வர்



கிண்ணியா பிரதேசத்தில் வெள்ளத்தினால் மூழ்கிய பிரதேசங்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் நேரில் சென்று பார்வையிட்டதுடன், நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மூதூர் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தாழ்நில குடியிருப்புக்கள் நீரில் மூழ்கி வருகின்றன.

கடல் கொந்தளிப்பினாலும் மழை வீழ்ச்சியினாலும் மூதூர் கரையோர கிராமங்கள் சிலவற்றில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. தொடர் மழையினால் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்கள் நீரில் முற்றாக மூழ்கியுள்ளன.

கடற்றொழிலாளர்கள் சீரற்ற கால நிலையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழையால் காத்தான்குடியிலுள்ள பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

நுவரெலியா, நவ.1

நுவரெலியா, நானுஓயா பிரதான பாதையின் பங்களாவத்தை காட்டுப் பகுதியில் நேற்று புதன்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சடலம் பிரேத பரிசோதனைக்காக தற்போது நுவரெலியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## பலநாள் திருடர்கள் மாட்டினர் வசமாக



எருவில்,நவ.1

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேரை பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக வாழைச்சேனை, மீராவோடை போன்ற பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டு வந்துள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோதே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு மீராவோடை, கிண்ணயடி வீதியில் உள்ள வீட்டில் வீட்டோடு இருந்த கடையில் உள்ள பொருள்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையை அடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடம் இருந்து பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சந்தேகநபர்களுடன் மேலும் சிலர் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இவர்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(ச -31)

## கந்தளாய்குளம் இராணுவக் கட்டுப்பாட்டில்

திருகோணமலை,நவ.1

திருகோணமலை, கந்தளாய் குளத்தில் இரத்தினக்கல் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து அப்பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தில் பலர் தற்போதும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இதனால் குறித்த பகுதிக்கு அதிக பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## மலையகத்தில் பனி மூட்டம்



நுவரெலியா,நவ.1

மலையகத்தில் அதிக மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதுடன் கடுமையான பனி மூட்டமும் காணப்படுகின்றது.

ஹற்றன் - கொழும்பு வீதி, ஹற்றன் - நுவரெலியா வீதி, ஹற்றன் - பொகவந்தலாவை வீதி என அனைத்து வீதிகளிலும் அதிக பனி மூட்டம் நிலவுவதால் வாகன சாரதிகள் மிகுந்த சிரமத்துடன் தமது வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் கடுமையான குளிர் நிலவுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## நுாரளையில் தொடரும் மழை வெளியேற்றப்பட்டனர் 250 பேர்



நுவரெலியா, நவ.1

நுவரெலியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக புளிக்வில் கொலனியில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு 14 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டன. நிலைமை நேற்று புதன்கிழமை காலையில் மோசமானதைத் தொடர்ந்து ஏனையவர்களும் குறித்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். வெளியேற்றப்பட்டவர்கள் நுவரெலியா தர்மபால சுற்று வட்டாரத்துக்கு அருகில் உள்ள விகாரையில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான [illegible] உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு இ[illegible] அமைச்சர்களான நவீன் திசாநாயக்க, சி.பீ.ரட்ணாயக்க ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் பிறருக்கு உதவிசெய்தால் தேவையற்ற சிரமம் வரலாம். கவனமுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற கூடுதல் பணி புரிவது அவசியமாகும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிர்மறை குணம் உள்ள ஒருவர் உங்களுக்குச் செய்த கெடுதல் முயற்சி பலமிழந்து போகும். நிறைவேற்ற வேண்டிய பணிகளை புதிய உத்வேகத்துடன் நடத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும்.

**மிதுனம்:** உங்களின் தன்மானத்துக்கு சிறிய சோதனை வரலாம். மனதில் பொறுமையும், செயல்களில் கூடுதல் நேர்மையும் பின்பற்றுவீர்கள். எதிர்பார்த்ததை விட பணவரவு குறைய லாம். பாதுகாப்பு குறைந்த இடங்களில் பிரவேசிக்க வேண் டாம்.

**கடகம்:** நீங்கள் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள் தாமதமான பணி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தேவைகளுக்காக தாராள பணச்செலவு செய்வீர்கள்.

**சிங்கம்:** நகைச்சுவை உணர்வுடன் நண்பர்களுடன் பேசி மகிழ்வீர்கள். வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய அனுகூலமான நிலை உருவாகும். இயன்றளவில் அறப்பணி செய்வீர்கள். அதிகாரிகள் பணி இலக்குகளை நிறைவேற்றி நிர்வாகத்திடம் பாராட்டு வெகுமதி பெறுவர்.

**கன்னி:** நீங்கள் சிலரது மாறுபட்ட யோசனைகளைப் புறக்கணிப்பதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். கடந்தகால வெற்றியின் அனுபவம் புதிய நம்பிக்கையை உருவாக்கும். பணவரவு மிதமான அளவில் கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி -17 வெள்ளிக்கிழமை 02.11.2012
திதி: திருதியை காலை 07.40 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப 10.49 வரை
சுபநேரம்: 06.04 - 07.34 வரை
ராகுகாலம்: 10.34 - 12.04 வரை

**துலாம்:** சிறிய செயல்களைக்கூட நிறைவேற்றுவதில் கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். பொறுமையுடன் செயற்பட்டு இலக்கை அடைவீர்கள் தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** உங்கள் நண்பரின் சிறந்த செயலை பாராட்டுவீர்கள். இதனால் நண்பரிடம் உங்களைப் பற்றி உயர்ந்த மதிப்பீடு உருவாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிபெற தேவையான பணிபுரிவீர்கள்.

**தனுசு:** நீங்கள் முன்னர் செய்த உதவிக்கு நற்பலன் தேடி வரும். உறவினர், நண்பர் பெருமைப்படுத்துவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** உங்கள் மனதில் இனம்புரியாத குழப்ப சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர புதிய யுக்தியைப் பயன்படுத்துவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்குத் தகுந்த சிகிச்சை மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** உங்களது திட்டமிட்டபணி நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை உங்களின் செயல் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூல சூழ்நிலைகளைப் பாதுகாப்பீர்கள்.

**மீனம்:** உங்கள் செயல்களில் புதிய பரிமளிப்பு ஏற்படும். பலரும் உங்களிடம் நல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூலகாரணி பலம்பெறும். ஆதாய பணவரவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைப்பயன் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 9 | | | | | |
| | | | 2 | 6 | 8 | 3 | | |
| 6 | | 8 | | 7 | | | 2 | 5 |
| | 1 | 5 | 8 | | 7 | | | 9 |
| 9 | | | | 4 | | | | |
| 7 | | | 5 | | 9 | 4 | 1 | |
| 8 | 5 | | | 9 | | 6 | | 1 |
| | | 7 | 6 | 5 | 3 | | | |
| | | | | | 1 | | | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 5 | 1 | 3 | 4 | 9 | 2 | 7 |
| 3 | 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 1 | 6 |
| 7 | 2 | 1 | 6 | 9 | 8 | 4 | 5 | 3 |
| 1 | 4 | 8 | 2 | 6 | 3 | 5 | 7 | 9 |
| 2 | 3 | 9 | 7 | 4 | 5 | 1 | 6 | 8 |
| 5 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 | 3 | 4 |
| 9 | 1 | 3 | 8 | 5 | 6 | 7 | 4 | 2 |
| 6 | 5 | 7 | 4 | 2 | 9 | 3 | 8 | 1 |
| 4 | 8 | 2 | 3 | 1 | 7 | 6 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பள்ளிவாசலுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு,நவ.1

அநுராதபுரம் , மல்வத்து பகுதியில் இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்ட தைக்கியா பள்ளிவாசலின் பாதுகாப்புக்கு என 24 மணி நேரமும் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அன்று அதிகாலை தைக்கியா பள்ளிவாசல் தாக்கப்பட்டது.

அமைச்சர் ரிஸாத் பதியுத்தீன் உள்ளிட்ட குழுவினர் இந்தப் பகுதிக்கு சென்று பாதிக்கப்பட்ட தைக்கியா பள்ளிவாசலை பார்வையிட்டதுடன், மீண்டும் இதனைப் புனரமைத்து சமயக் கடமைகளை நிறைவேற்ற உதவிகளைச் செய்வதாகவும் கூறியுள்ளனர். (ச)



இலங்கை நாணய சபையின் நிதிகளில் மோசடிகள் இடம்பெற்றதாக தெரிவித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜீவ சேனசிங்க, ரோசி சேனநாயக்க மற்றும் தலதா அத்துகோரள ஆகியோர் லஞ்ச ஊழல்கள் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

### கஞ்சா கொண்டு சென்றவர் மாட்டினார்

கொழும்பு,நவ.1

கஞ்சா எடுத்துச் சென்ற நபர் ஒருவர் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சைக்கிளில் கஞ்சாவை எடுத்துச் செல்லும்போது இவர் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் பெறுமதியான கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நீதியரசரை பதவி நீக்க இதுவரை 118 எம்.பிக்கள் கைச்சாத்து

## பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை

கொழும்பு,நவ.1

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் அவரை பதவி நீக்குவதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 118 அரச உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கிடைக்கப் பெற்றாலே இந்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

இந்த நிலையில் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பங்களையும் பெற்ற பின்னர், குறித்த பிரேரணையை சபாநாயகருக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இலங்கையின் அரசமைப்பின் படி, பெரும்பான்மை ஆதரவுடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்தே உயர் நீதிமன்ற நீதிபதி மற்றும் மேன்முறையீட்டு நீதிபதி ஆகியோரை பதவி நீக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## அதிவேக நெடுஞ்சாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

### தரம் குறைந்ததாக முறைப்பாடு

கொழும்பு,நவ.1

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று கொழும்பு, திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த சரத் சுபசிங்க என்ற பொதுமகன் ஒருவர் அறிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு தரம் குறைந்த காப்பெற் போடப்பட்டுள்ளதால், குறித்த நெடுஞ்சாலையினூடான பயணத்தின் போது ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க முடியாதுள்ளது என்று கூறியே இந்த வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நபருடைய கார், நெடுஞ்சாலையில் விபத்துக்கு உள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளான காரை திருத்துவதற்காக ஒன்றரை லட்சம் ரூபாவை செலவிட்டதாக அவர் கூறினார்.

குறித்த நெடுஞ்சாலையில் இடத்துக்கிடம் நீர் தேங்கி நிற்பதோடு, சில இடங்களில் போடப்பட்டுள்ள தார், குவியலாகவும் காணப்படுகிறது. இந்த நெடுஞ்சாலைக்கு இடப்பட்டுள்ள காப்பெற் மிகவும் தரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகார சபையின் தலைவர், இந்த நெடுஞ்சாலை ஜப்பான் தொழில்நுட்பத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)

#### மஞ்சுள திலகரட்ண தாக்கப்பட்ட சம்பவம்:

## அழுத்தத்துக்கு அடிபணியாமல் சந்தேகநபரை கைது செய்யுங்கள்

### நீதிவான் கடும் தொனியில் உத்தரவு

கொழும்பு,நவ.1

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் பாரதூரமானது. எனவே அழுத்தங்களுக்கு அடிபணியாது சந்தேகநபரை நீதிமன்றத்தில் விரைவில் முன்னிலைப்படுத்துமாறு கல்கிஸை பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு கல்கிஸை பிரதான நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் பொலிஸாருக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தவழக்கு விசாரணையின்போது கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அத்துல ரணகல்ல, பொலிஸார் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ணவின் வாழ்க்கை தொடர்பில் ஆராய்ந்துகொண்டிருக்கின்றனரே தவிர, குற்றவாளியை கைதுசெய்யும் வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சட்டத்தரணியின் குற்றச்சாட்டை மறுத்த பொலிஸார் அவரது தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் தொடர்பான விசாரணை முறையாக முன்னெடுக்கப்படுகின்றது. தாக்குதல் நடத்துவதற்காக சந்தேகநபர்கள் வருகை தந்ததாகக் கூறப்படும் வாகனம் தொடர்பில் கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

தனது நீதிமன்ற அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பாரதூரமான சம்பவமாகும் என்று சுட்டிக்காட்டிய பிரதான நீதிவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ச)

## சீன முதலீடுகளில் அதிக தரகுப் பணம்

**சீனா இலங்கையில் 6 பில்லியன் டொலர்களுக்கு அதிகமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.**

கொழும்பு,நவ.1

இலங்கையில் சீனா மேற்கொண்டு வரும் முதலீடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் அதிகாரத்தரப்பினர் அதிக அளவில் தரகுப் பணம் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

2005 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் சீனா இலங்கையில் 6 பில்லியன் டொலர்களுக்கு அதிகமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 1,200 கோடி தொடக்கம், 1800 கோடி டொலர்களை தரகுப் பணமாக பெற்றுக் கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை இன்னும் 3 வருடங்களினுள் சீனா இலங்கையில் மேலும் 6000 கோடி டொலர்கள் பெறுமதியான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# குழாயில் கசிந்த எரிபொருளை முண்டியடித்து சேகரித்த மக்கள்

## கொழும்பு ஒறுகொடவத்தையில் சம்பவம்



ஒறுகொடவத்தையில் நிலக்கீழ் எரிபொருள் விநியோகக் குழாயில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதை அடுத்து மக்கள் மக்கள் அதனை சேகரிக்க முண்டியடித்தனர்.

சிலோன் பெற்றோலியம் டேர்மினல் லிமிட்டட்டின் களஞ்சியசாலை விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருளை விநியோகம் செய்யும் எண்ணெய்க் குழாயிலேயே இவ்வாறு கசிவு ஏற்பட்டுள்ளது.

சுமார் 50 வருடங்கள் பழமையான இந்தக் குழாய், 5 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இவற்றில் திடீரென ஆங்காங்கே கசிவுகள் ஏற்படுகின்றன. இதனால் முழுமையாக புதிய குழாய்களை பொருத்தும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலேயே, நேற்று முன்தினம் காலை இவ்வாறு நிலக்கீழ் குழாயில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது.

குழாயில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதாக கிடைத்த தகவலையடுத்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குழாய் மூலமான எண்ணெய் விநியோகத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியது.

குழாயில் எஞ்சியுள்ள எண்ணெயை பாதுகாப்பாக அப்புறப்படுத்த குறித்த பகுதிக்கு பவுசர்கள் அனுப்பி சேகரிக்கப்பட்டன.

சிலோன் பெற்றோலியம் டேர்மினல் லிமிட்டட்டின் பொறியியலாளர் பிரிவினர் குறித்த இடத்துக்கு விரைந்து குழாயின் திருத்த வேலைகளை ஆரம்பித்தனர். இதனையடுத்து நேற்று முன்தினம் மாலைக்குள் திருத்தப் பணிகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டன.

நிலக்கீழ் எண்ணெய் கசிவின் காரணமாக சிலோன் பெற்றோலியம் டேர்மினல் லிமிட்டட்டினருக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் எவ்வளவு என்பது தொடர்பாக உடனடியாக கணக்கிடப்படவில்லை என்று நிறுவனத்தின் பேச்சாளர் நிஸ்ஸங்க ஜயவர்தன தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா
## ஏற்பாட்டுக்குழு அமைத்தல்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக 30 வருட காலமாகத் தனது சேவையைத் திறம்படச் செய்து 05.12.2012 இல் ஓய்வுபெறும் எமது கணித ஆசான்

**க.வேலாயுதம்**

அவர்களின் மணிவிழாவைக் கொண்டாடும் முகமாக ஏற்பாட்டுக்குழு ஒன்றை அமைப்பதற்கான ஒன்றுகூடல் நிகழ்வு 04.11.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எமது கல்லூரியின் அனைத்து கணித விஞ்ஞான பிரிவு பழைய மாணவர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(24958) (2-

**கணித, விஞ்ஞான பழைய மாணவர்கள்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

---

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள...............

**றெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்**

இல. 687, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(கி/4416)(3.6.7) தொ.பே - 0212219686

---

## புறொயிலர் தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழி தேவை. கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு:
மல்ரி பாம் சென்ரர்,
இராமநாதன் வீதி,
கலட்டி.
(24955)(2-6) T.P: 021 791 2783

---

## வாகன சாரதி தேவை

இலகு ரக வாகன சாரதி தேவை. நியாயமான சம்பளம் வழங்கப்படும். கிராம சேவையாளரின் நற்சான்றிதழுடன் நேரில் வரவும். (45 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது).
தொடர்பு: லிப்ரா மரத்தளபாட நிலையம்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.
(24954)(2-6) T.P: 021 791 2783

---

# கேள்வி அறிவித்தல் - 2013
## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: | அலுவலக நாள்களில் மு.ப 8.30- பி.ப 3.00 மணி வரை 01.11.212 - 14.11.2012 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: | 15.11.2012 - மு.ப 9.30 மணி வரை |
| கேள்வி திறக்கும் திகதி: | 15.11.2012 மு.ப 10.30 மணி |
| கேள்வி திறக்கும் இடம்: | |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில்கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும் . இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, VAT நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT, VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | | |
| 1 | கல்லாறு | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 | 1,000.00 | #REF! |
| 3 | முரசுமோட்டை | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 4 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 5 | ஊற்றுப்புலம் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 6 | உருத்திரபுரம் D/10 | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 7 | இராமநாதபுரம் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 8 | வன்னேரி | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 9 | அம்பலப்பெருமாள் சந்தி | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 10 | கண்டாவளை | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 11 | பரந்தன் | 20,000.00 | 1,000.00 | #REF! |
| 12 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 13 | இரணைமடு | 40,000.00 | 1,000.00 | #REF! |
| 14 | புன்னைநீராவி | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 15 | வட்டக்கச்சி | 20,000.00 | 1,000.00 | #REF! |
| 16 | கிளிநொச்சி | 40,000.00 | 1,000.00 | #REF! |
| 17 | உருத்திரபுரம் D/8 | 10,000.00 | 1,000.00 | #REF! |
| | கோழி இறைச்சிக் கடை | | | |
| 1 | இரணைமடு | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 2 | கிளிநொச்சி இல -01 | 40,000.00 | 1,000.00 | #REF! |
| 3 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 4 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 | 1,000.00 | #REF! |
| 5 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | #REF! |
| | ஆட்டிறைச்சிக் கடை | | | |
| 1 | கிளிநொச்சி | 10,000.00 | 1,000.00 | #REF! |
| 2 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | #REF! |

**நிபந்தனைகள்**

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு
4. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்
5. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்

செயலாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(கி/4332)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முன்னாள் கல்விளான் குளம் அ.த.க பாடசாலை அதிபர் அமரர் பொன் ரஞ்சன் சுபாஜினி தம்பதியரின் அன்பு மகள்

***ரஞ்சன் பிறைநிலா***

[மு/அணிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயம்] அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தையும், வலயமட்டத்தில் 2 ஆம் இடத்தையும், மாவட்ட நிலையில் 6 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார், இவர் மேன்மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

இல.198, புகழேந்தி நகர்.
யோகபுரம். [24952][6.3

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர், உறவினர்.

---

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கியின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளர்

**ஜயாத்துரை தங்கேஸ்வரன்**

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி அல்லது
அன்னசத்திர லேன்.

- அயலவர்கள் மற்றும் ஆலய நிர்வாகம்.

(24956) (2-6)

---

## மரண அறிவித்தல்

### யோகீஸ்வரன் நிசாந்தன்

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகீஸ்வரன் நிசாந்தன் (30.10.2012) செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் யோகீஸ்வரன் (கொலண்ட்) - பரமேஸ்வரி தம்பதியரின் புதல்வனும் ஜனனி (தெ.மே.ப.நோ. கூ.சங்கம், கைதடி), சிவரூபன், கஜேந்திரன் (மாணவன் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி.ம.வி), ஜீவிக்கா (மாணவி வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஊரியான் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி மேற்கு,**
**கைதடி.** (கி/4390)(2-6)

தகவல்:
**ந-ஏரம்பமூர்த்தி** *(பெரிய தந்தை).*

---

# 31 ஆம் நாள் ஆராதனை



**திருமதி பத்மாவதி மாணிக்கவாசகர்**
(யாழ். மத்திய கல்லூரி முன்னாள் நூலகரின் பாரியார்)

பாசத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த
பத்மா மச்சினியை
இனி என்று காண்போம்!
அன்னார் ஆன்மா ஈடேற்றம் பெற
ஆடல் வல்லான் அருள் புரிவாராக.

ஆராதிக்கும்:
கா.கருணாநிதி, இந்திரா மற்றும் பிள்ளைகள் (கனடா)
வை.விவேகானந்தன், விஜயா மற்றும் பிள்ளைகள்

(கி/4434)(2-6)

1 ஆம் குறுக்குத் தெரு - யாழ்.




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## போட்டோ பிரதியாக வெளிவந்துள்ளது காசி காண்டம்

சுழிபுரம், நவ.1

வழக்கம்பரை முத்துமாரியம்மன் பஜனைச் சபையினர் காசி காண்டம் செய்யுள் மட் டும் கொண்ட பாடல் நூலை போட்டோப்பிரதியாக வெளியிட்டுள்ளனர். வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வரும் கார்த்திகை மாதம் முழுவதும் தினமும் பிற்பகல் இரண்டு மணிக்கு செய்யுள் படித்து நிறைவு பெறும். (வ-28)

# நாடு கடத்தப்படுவதைக் கண்டித்து மெல்போர்னில் தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டம்



ஆஸ்திரேலியாவின் - மெல்போர்ன் பகுதியில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் தமிழர் ஒருவர் நாடு கடத்தப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அகதிகள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழரை நாடு கடத்துவதை ஆஸ்திரேலியா வாபஸ் பெறும் வரை போராட்டம் தொடரும் என்று அகதிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படவிருந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார்.

42 வயதான குறித்த இலங்கையரை நாடு கடத்த வேண்டாம் எனக்கோரி 50 இற்கும் மேற்பட்ட ஏனைய புகலிடக்கோரிக்கையாளர்கள் மாரிபய்ரோங் தடுப்பு முகாமில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நாடு கடத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு நீதிமன் றில் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த இலங்கையர் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளார். 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குறித்த நபர் புகலிடம் கோரி ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளார்.

உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த குறித்த நபருக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபருக்கு உயிர் ஆபத்து ஏற்படக் கூடிய காயங்கள் எதுவும் கிடையாது எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்களில் சாதகத் தன்மை ஏற்படாது என்று முகாம் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (வ)

## நடத்தையில் மாற்றம் அவசியம்

மனிதன் தனது குணத்தை மாற்றி முன்னேற வேண்டும். ஒருவனது மனப்பாங்கில் எதுவித மாற்றமும் இல்லையானால் அவனது ஆத்மிகப் பயிற்சிகளாகிய ஜபம், தியானம், யோகம், கர்மம், சேவை அனைத்தும் எவ்வித பிரயோசனமுமற்றதாகி விடும்.

மாற்றமடைய வேண்டியது மனிதனல்ல. சிந்தையாகும். உடை மாற்றத்திலும் பார்க்க மிக முக்கியமானது நடத்தையில் மாற்றமாகும்.



நன்றி,
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# ஐம்பதுக்கு மேற்பட்ட போலியான விசாக்களுடன் இலங்கையர் கைது

சென்னை, நவ.1

சென்னையில் இருந்து இலங்கை செல்ல ஜெட் ஏர்வேஸ் விமானம் நேற்று முன்தினம் மாலையில் தயாராக இருந்தது. அந்த விமானத்தில் சென்ற பயணிகளை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது கொழும்பைச் சேர்ந்த முகம்மது நாசரின் (வயது 35) உடைமைகளை பரிசோதித்தனர்.

சட்டவிரோதமான பொருள்கள் எதுவும் அவரிடம் இல்லை. ஆனாலும் அவர் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் தீரவில்லை. இதையடுத்து அவரை தனியறைக்கு அழைத்துச்சென்று சோதனை செய்தனர்.

அப்போது உடலில் கட்டி வைத்திருந்த ஒரு பொட்டலத்தைக் கண்டுபிடித்தனர். அதைப்பிரித்துப் பார்த்தபோது கத்தைகத்தையாக 50 இற்கும் மேற் பட்ட போலி விசாக்கள் இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அவை அனைத்தும் பிரிட்டன், சவூதி அரேபியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு செல்லக்கூடியவை.

இந்த விசாக்கள் அனைத்தும் சென்னையில் தயாரித்து கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. அந்த விசாக்கள் தீவிரவாதிகளுக்காக கடத்தப்பட்டனவா? என்று பிடிபட்ட இளைஞரிடம் தீவிரவாத தடுப்புப் [illegible] டுள்ளனர். (வ)

# கல்வித் தகைமை அடிப்படையில் இலங்கையர்களுக்கு குடியுரிமை

## ஆஸி. திட்டம்

கல்வித் தகைமை அடிப்படையில் இலங்கையர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு ஆஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

சிறந்த கல்விப் பின்புலம் மற்றும் தொழில்சார் தகைமைகளை உடையவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் குடியுரிமை வழங்கப்பட உள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கருத்திற்கொண்டு மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆசிய பிராந்திய வலய நாடுகளுடன் மிக நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்துள்ளார்.

கல்விக்காக அரசு பெரியளவிலான நிதியை ஒதுக்கீடு செய்தபோதிலும் தொழில்சார் நிபுணத்துவமுடைய வெளிநாட்டவர்களின் சேவை அவசியப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, சீனா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, வியட்நாம் உள்ளிட்ட ஆசிய பிராந்திய வலயத்தின் பத்து நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை தங்கேஸ்வரன்

*(இளைப்பாறிய சிரேஷ்ட முகாமையாளர் இலங்கை வங்கி தலைமை அலுவலகம், முகாமையாளர் சம்பத் வங்கி, வவுனியா)*



இல.51, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 72 3/1,ஹம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை தங்கேஸ்வரன் நேற்று (31.10.2012) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சத்தியலக்ஷ்மி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரி (இலங்கை வங்கி) யின் பாசமிகு கணவரும், அபிராமி (Siedles (Pvt) Ltd), சங்கீதா (Commercial Bank H/O), பிரியந்தன் (மருத்துவத்துறை மாணவன் China) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவன் (Mass Media Syndicate (Pvt) Ltd), சிவரூபன் (பொறியியலாளர் - Vonlan Construction) ஆகியோரது ஆசை மாமனும், கிரி ஷானி, கவினீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகதாம்பாள், தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2012) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் தகனக் கிரியைகள் நடைபெறும். பிற்பகல் 1.15 மணியளவில் பூதவுடல் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கேஸ்வரன் குடும்பத்தினர்.
T.P.0112553285

(வி/4432)(2-6)



## உயர்வுபெற்றீர் உவகை கொண்டோம்



### அதிபர் வே.விநாயகமூர்த்தி

(B.A.,(Hons), Dip. in Ed.,M.Ed, SLPS 2 - I)

தென்மராட்சியில் புகழுடன் விளங்கும் எமது கல்லூரியை ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தினுள் உள்வாங்குதல், 1AB யாகத் தரமுயர்த்தி மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்துதல், ஆரம்பப் பிரிவைத் தனியான ஆரம்பப் பாடசாலையாக மாற்றுதல், வீரசிங்கம் ஞாபகார்த்த மேல் மாடிக் கட்டடத்தை அமைத்தல் ஆகிய செயற்பாடுகளில் வெற்றிகண்டு மேலும் மாணவர்களுக்குரிய விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்குவதற்கும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் முதல்வர் "பிரதீபா பிரபா" விருதைப் பெற்றமையை இட்டு அவரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் அவரது சேவை தொடரவும், நலம் பெற்று வாழவும் வேம்படி விநாயகனை வேண்டுகின்றோம்.

Best Wishes

கல்லூரிச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(சி/2809)(2.6.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது

## கலவன் பாடசாலை

பாடசாலைகள் மொழி ரீதியாகவும் ஆண், பெண் என்ற பால் ரீதியாகவும் இனங்கள் ரீதியாகவும் சமயங்கள் ரீதியாகவும் பாகுபடுத்தப்படுகின்றன. இந்தப் பாகுபாடுகள் பாடசாலைகளின் வளர்ச்சியையும் மாணவர்களின் முன்னேற்றத்தையும் பாதிக்கின்றன. இன்றைய நவீன யுகத்தில் பாடசாலைகளை வெவ்வேறாக அடையாளப்படுத்துவது மாணவர்களின் ஒற்றுமையின்மைக்கும் இன முரண்பாட்டுக்கும் மத வேறுபாட்டுக்கும் பால் நிலை வேறுபாட்டுக்கும் காரணமாக அமைகின்றது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற பழமொழிக்கு அமைய மாணவர்களை சிறுவயதில் ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டின் மூலம் பாகுபடுத்துவது எதிர்காலத்தில் மாணவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். அதுமட்டுமன்றி மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவதும் கடினமாகும்.

மாணவர்களை சமுதாயத்துக்கு ஏற்ற நற்பிரஜைகளாக்கும் பொறுப்பு பாடசாலைக்கே உண்டு. பாடசாலைகள் மாணவர்களின் பண்பாடு, கலாசார, விழுமியங்களைப் புகட்டுகின்ற இடமாகத் திகழ்கின்றன. இந்த நிலையில் பாடசாலைகளை ஆண், பெண் என்ற பால்நிலை வேறுபாட்டில் பாகுபடுத்துவது சமூகத்துக்கு ஏற்புடையதல்ல.



இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் பாடசாலைகளை ஆண், பெண் எனப் பாகுபடுத்துவது மனித சமுதாயத்தை பாதிப்படையச் செய்கின்றது. ஆணுக்குப் பெண் சமம் எனக் கூறப்படும் இன்றைய நவீன உலகில் கலவன் பாடசாலைகள், தனிப் பாடசாலைகள் எனப் பாடசாலைகளைப் பாகுபடுத்துவது ஏற்புடையதல்ல.

பாடசாலைகள் கலவன் பாடசாலைகள், தனிப் பாடசாலைகள் எனக் காணப்பட்டாலும் கலவன் பாடசாலைகளே ஆண், பெண் சமத்துவத்தை மதிக்கின்ற பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. கலவன் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, மற்றவர் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல் என்பன வளர்க்கப்படுகின்றன.

ஆண்கள், பெண்கள் கற்கின்ற கலவன் பாடசாலைகளில் நடைபெறுகின்ற சமய, கலாசார, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் மாணவர்களின் ஈடுபாடும், ஆர்வமும் அதிகரிக்கும். இதனால் பாடசாலைகளில் விழாக்களும் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். இதனால் மாணவர்களின் ஆற்றல்களைக் கலவன் பாடசாலைகளே வளர்க்கின்றன.

கலவன் பாடசாலைகளில் ஆண்களும் பெண்களும் கல்வி கற்பதால் இவர்களுக்கிடையே பால்நிலை வேறுபாடுகள் தோன்றமாட்டாது. பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்ற திறமை கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களிடையே காணப்படுகின்றன. இதனால் இந்த மாணவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாகவும் பண்பாட்டு கலாசார விழுமியங்களை மதித்து நடப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கலவன் பாடசாலையில் கற்கும் ஆண், பெண் மாணவர்கள் புரிந்துணர்வு அடிப்படையில் தங்கள் சக மாணவர்களை உற்சாகப்படுத்துவதால் மாணவர்களின் விளையாட்டுத் திறன் ஆற்றல் அதிகரிக்கின்றது.

தனிப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் இடையே சக மாணவர்களைப் புரிந்துகொள்ளாத தன்மை காணப்படுகின்றது. தனிப்பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் சகபாடிகள் மூலம் சமவயதுக் குழுக்களாக இயங்குகின்றன. இந்தக் குழுக்கள் பல்வேறு கலாசார சீரழிவுகளை சமூகத்துக்கு ஏற்படுத்துகின்றன. தனிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற ஆண் மாணவர்கள் போதைப் பொருள் பாவனை, மதுப்பாவனை என்பவற்றுக்கு அடிமையாவதைக் காணலாம். அதேபோல் தனிப் பாடசாலையில் கல்வி கற்கும் பெண் மாணவர்கள் பாடசாலைகளில் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

அன்றைய காலத்தில் கலவன் பாடசாலைகளே கூடுதலாகக் காணப்பட்டதால் மாணவர்களின் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டது. சமூகத்தில் ஒற்றுமை அதிகரித்தது. சமூகத்தோடு இசைந்து வாழ்ந்து பெரியவர்களை மதிக்கின்ற ஆற்றலும் மாணவர்களுக்கு இருந்தது. ஆனால் இன்றைய காலத்தில் தனிப் பாடசாலையின் உருவாக்கமானது மாணவர்களின் பால்நிலை வேறுபாட்டுக்கும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இன்றைய தேவை கருதி சமூகத்தில் கலவன் பாடசாலைகளின் உருவாக்கமே அவசியமான ஒன்றாகும். இதன்மூலம் மாணவர்களின் ஆற்றல் வளர்க்கப்படுகின்றது. மேலும் கலவன் பாடசாலை மூலமே சமூகத்தில் ஆண், பெண் சமத்துவம், புரிந்துணர்வு என்பவற்றுடன் சிறப்பாக வாழ்வதற்கு வழிவகை செய்யவும் முடியும் எனலாம்.

க.கணேசதேவா,
மாதகல் கிழக்கு, மாதகல்.

## மனிதநேயத்தை வளர்த்திடுங்கள்

நம்மில் பலர் பேருந்தில் பிரயாணம் செய்கின்றோம். எல்லோருக்கும் ஆசனத்தில் இருந்து செல்லும் பாக்கியம் கிடைப்பதில்லை. ஆனாலும் ஆசனத்தில் இருந்து பயணம் செய்வதை எல்லோரும் விரும்புகின்றோம். இருக்கையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் சிலர் தூக்கத்தில் இறங்க வேண்டிய இடத்தைக் கூட தவறவிடுவார்கள். சிலர் தூங்குவது போல பாவனை செய்வார்கள்.

★கைக்குழந்தையுடன் வருபவர்களை
★ கர்ப்பவதிகளை
★ நோயாளர்களை
★ ஊனமுற்றோரை
★ சொந்த பந்தங்களை
★ முதியோரை

காணும் சந்தர்ப்பத்தில் தெரியாதவர்கள் போலும் தூக்கத்தில் இருப்பது போலும் நீங்கள் அமர்ந்து கொண்டு பேருந்தில் பயணம் செய்யாதீர்கள்.

மற்றவர்களுக்கும் இருப்பதற்கு ஆசனத்தை விட்டுக் கொடுத்து உதவி செய்யும் மனித நேயமே சிறந்தது.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.



## வீதி விபத்து

வடக்கில் வசந்தம் வந்ததுவோ
வாழமுன் சாவும் அழைத்ததுவோ
அகலமான வீதி தனில்
ஆறுதலாய் செல்லாமல்
விரைந்து நீயும் சென்று
விதியை முடிப்பதேனோ?
வீதி அகலிப்பு அது அபிவிருத்தியென்றால்
வீதி விபத்து அது விதியென்றாகிடுமோ?
விதியை மதியால் வெல்லலாம் மனிதா
மரணத்தை வலிந்து வாரிக்கொள்ளாதேயடா!
விபத்தொன்றும் சொல்லி வருவதில்லையே
வீதியில் விவேகமாய் செயற்படின்
விபத்தகு மனிதனும் நீயன்றோ

வீதி தனில் விரைவான பயணமென்றால்
வில்லங்கம்தான் வந்திடுமே
பயணத்தின் பாதியில் செல்பேசி
சிணுங்குமெனில் சேர்ந்தவர்கள்
ஒப்பாரி செய்யத்தான் வேண்டுமல்லோ
மது மயக்கத்தில் வாகனத்தை ஓட்டுடில்
மரணம்தான் உம்மை விரட்டிடுமே
தூக்கக் கலக்கத்தில் சாரதியம் தூரமாகில்
துக்கம்தான் உம் வீட்டில்
வீதிச் சமிக்ஞைகளை மீறும் பட்சத்தில்
பரிதாபமாய் போம் உம் கதியே
ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல
முனைந்தால் முட்டிமோதிக் கொள்வீரே
சகபாடிகளோடு சாலை நிரல் பயணமெனில்
சாவுதான் நிரையாகிடுமே
தலைக்கவசமின்றி மோட்டாரை முறுக்குவீராயின்
முன்னான் அடிப்பட்டால் முடிவுதான் என்னவோ?
சாரதியர் நீர் என்பதால்
சாதுரியம் சாலையில் தேவையன்றோ
விலைமதிப்பில்லா மனித உயிரை
வீதியிலே நசிப்பதுவோ
வீதி விசாலமென்றால்
விசனமற்ற பயணமன்றோ- ஆதலால்
சாரதியம் சாமர்த்தியமானதன்றோ
வீதி விதிகளை அறிந்து நீரும்
விவேகமாய் செயற்படுவீர்
விபத்துக்களைத் தவிர்த்திடுவீர்

ஆன் அன்ரனிகணேஸ், நாடகத்துறை, தேசிய கல்வியியற் கல்லூரி.





## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**

**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரயோசனமானதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

.................. திகதி

.................. கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழையால் வீதிகள் சேதம்....


கே.கே.எஸ்.வீதி


கஸ்தூரியார் வீதி


ஆஸ்பத்திரி வீதி


ஏ-9 வீதி

## செபமாலைப் பேரணி

பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்திலிருந்து பேராலயம் வரை கடந்த ஞாயிற்றுக் கிழமை செபமாலைப் பேரணி இடம்பெற்றது. அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான மேற்படி பேரணியில் தென் பகுதியைச் சேர்ந்த சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான தேவதாயின் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டு நிறைவை ஒட்டியே மேற்படி செபமாலைப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த மரியாயின் சேனையானது முதன் முதலில் பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் சமாதானம், இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பவற்றை வலியுறுத்தி செபமாலை மாதாவின் திருச்சொரூபத்துடன் மக்கள் பேரணியாகச் சென்றனர்.

இந்தப் பேரணி தொடர்பாக கடந்த 30 ஆம் திகதி வெளியான செய்தியில் சில தவறுகள் இடம்பெற்றிருந்தன என்பதை மரியாயின் சேனை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

(ஒ)

### இலங்கைப் பெண்ணை திருமணம் செய்வதற்காக

## பதவியைத் தூக்கியெறிய முன்வந்த இந்திய இராணுவ அதிகாரி

இலங்கைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்வதற்காக தனது இராணுவ பதவியை ராஜினாமாச் செய்ய முற்பட்டுள்ளார் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர்.

இந்திய இராணுவத்தின் மேஜர் பதவிநிலை வகிக்கும் அதிகாரியான இவரின் ராஜினாமா கடிதத்தை இராணுவம் ஏற்க மறுத்ததை அடுத்து அவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்திய இராணுவத்தின் சமிக்ஞை படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் விகாஸ் குமார் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்தவராவார்.

இராணுவ சமிக்ஞை படைப்பிரிவில் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை இருப்பதாலும் இலங்கைப் பெண்ணுடன் இவருக்கு உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடத்த வேண்டியிருப்பதாலுமே அவரது ராஜினாமாவை ஏற்க முடியாதுள்ளது என்ற இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இருப்பினும் விகாஸ் குமாரின் ராஜினாமாவை இராணுவம் மறுக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த நிலையில்,மேற்படி தீர்ப்பை எதிர்த்து இந்திய இராணுவம் மேன்முறையீடு செய்துள்ளது.

மேஜர் விகாஸ் குமாரின் காதலியான இலங்கைப் பெண் அனிலா ரணமாலி குணரத்ன, பெங்களூரில் முதுமாணிப் பட்டக் கற்கை நெறியொன்றை மேற்கொண்டு வருகின்றார். இந்தநிலையில், இருவரும் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருமணம் செய்யவிருந்தனர்.

இந்திய இராணுவ சட்டப்படி, வெளிநாட்டுப் பிரஜை யொருவரை இந்திய இராணுவத்தில் உள்ள ஒருவர் திருமணம் செய்ய முடியாது. இதனாலேயே விகாஸ் குமார், தனது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்தார் என்று இந்திய செய்திகள்தெரிவிக்கின்றன. (வ)

## செவ்வாயில் கனிம வளங்கள் கண்டுபிடித்தது கியூரியாசிட்டி

செவ்வாய்க் கிரகத்தில் கனிம வளங்கள் உள்ளன என்று கியூரியாசிட்டி விண்கலம் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்துள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியும் என்று ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா மையம் கியூரியாசிட்டி ஆய்வு விண்கலத்தை அனுப்பி வைத்துள்ளது. அங்கு அது புகைப் படங்களை எடுத்து அனுப்பியும் பல ஆய்வுகளை மேற்கொண்டும் தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகிறது.

அங்குள்ள பாறையை வெட்டி எடுத்து புகைப்படம் எடுத்து அனுப்பியது. தற்போது அங்கு கனிம வளங்கள் இருப்பதை கண்டு பிடித்துள்ளது. செவ்வாய் கிரகத்தின் மணலை கியூரியாசிட்டி ஆய்வகத்தில் உள்ள அதிநவீன எக்ஸ்ரே ரெலஸ் கோப் மிகவும் உன்னிப்பாக ஆய்வு செய்தது. அதில், பளிங்கு கற் படிவங்கள் உள்ளன. இது ஹவாயில் எரிமலைப் பகுதியில் இருப்பது போன்று உள்ளது. அதன் மூலம் செவ்வாய்க் கிரகத்தில் உள்ள மணல் பூமியின் மணல் பரப்பை ஒத்துள்ளது.

எனவே அங்கு பூமியை போன்ற கனிம வளங்கள் இருப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது. இந்த தகவலை கியூரியாசிட்டி விண்கல ஆய்வகத்தின் தலைமை விஞ்ஞானி டேவிட் பிளேக் தெரிவித்துள்ளார். தனது 22 ஆண்டு காலகட்டத்தில் தற்போது தான் அதுபோன்ற அதிசய நிகழ்வுகளை காண முடிகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

## புற்றுநோய்க்கு அதிகளவில் இலக்காவோர் புகைப்பிடிப்போரே

### யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், நவ.1

புகைத்தல்பொருளில் உள்ள நான்காயிரம் இரசாயனப் பதார்த்தங்களில் 43 பதார்த்தங்கள் புற்றுநோயை ஏற்படுத்துவதாக உள்ளதாலே புகைப் பிடிப்பவர்கள் மத்தியில் புற்றுநோய், அதிகமாக ஏற்படுவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகைப் பொருளில் உள்ள 43 இரசாயனப் பதார்த்தங்கள் புற்றுநோயை ஏற் படுத்துவதுடன் நுரையீரலையும் பாதிப்படையச் செய்கின்றது. அத்துடன் புகைத்தலைச் சுவாசிப்பவர்களும் அதேயளவு பாதிப்பை சந்திப்பதுடன் சூழலும் மாசடைகிறது.

புகைத்தலால் உண்டாகக் கூடிய விளைவுகள் மற்றும் சமூகம் எதிர் கொள்ளக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ரீதியாக புகைத்தல் தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி புகைத்தல் தடுப்புக்குழுக்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருள் களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார்கள். அத் துடன் பொதுஇடங்களில் புகைப் பிடிப்பவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.- என்றார்.(வ-14)

## புற்றுநோயாளரின் சிகிச்சைக்கென நிதி சேகரித்த பெண் சிக்கினார்

கொழும்பு,நவ.1

புற்று நோயாளர் ஒருவருக்கு சிகிச்சையளிப்பதற்கு என்று பொய் கூறி சட்ட விரோதமான முறையில் பொது மக்களிடம் நிதி சேகரித்த பெண்ணொருவர் கைது செய்யப் பட்டுள்ளார். குறித்த பெண் கதுருவெல நகரில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார் என்று பொலநறுவை பொலி ஸார் தெரிவித்தனர்.

குருநாகலை பிறப்பிடமாகக் கொண்ட குறித்த பெண், புற்றுநோய் ஏற்பட்டவரின் சகோதரியாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டு புற்றுநோயாளரைக் குணப்படுத்துவதற்கு தேவையான நிதியை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.இந்தப் பெண் தொடர்பாக பொலநறுவை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட கரம் சங்கம் நடத்திய முதலாவது திறந்த சதுரங்கப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது மேற்படி போட்டியில் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகள் விருந்தினர்களுடன். (த-23)

## கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.1

வவுணதீவுப் பிரதேச செயலகமும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களமும் இணைந்து நடத்திய வவுணதீவுச் சிறுவர் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தது. இந்தச் சுற்றுப் போட்டியில் ஏராளமான சிறுவர் கழகங்கள் பங்கெடுத்திருந்தன. இதில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;

முதலாமிடம் - கண்ணன்குடா சிறுவர் கழகம்

இரண்டாமிடம் - கொத்தியாபுலை சூரிய உதயம் சிறுவர் கழகம்.

மூன்றாமிடம் - மண்டபத்தடி மலை மகள் சிறுவர் கழகம். (த-23)

## கிரிக்கெட் இறுதியாட்டத்தில் காமாட்சி வி.க. வெற்றி



யாழ்ப்பாணம்,நவ.1

மானிப்பாய் வட்ட லியோ கழகத்தினரால் நடத்தப்பட்ட 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட மென் பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது.

28 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி 4:3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்கும் இழப்பின்றி வெற்றி இலக்கினை அடைந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாக ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக வீரன் ஏ.ஜெயரூபனும் இறுதியாட்டத்தில் ஆட்ட நாயகனாக ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி வீரன் தெரிவுசெய்யப்பட்டனர். (த-23)

## வடக்கு அணிக்கான உதைபந்து போட்டி மழையால் ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், நவ.1

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது. அதன் மூன்றாவது கட்டமாக வடமாகாண அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்றும், இன்றும் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெறவிருந்தது.

போட்டிகள் தற்போது நாட்டில் பெய்துவரும் அடை மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ந-23)

# அபார பந்து வீச்சால் மாத்தளையை தோற்கடித்தது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம்,நவ.1

இலங்கைப் பாடசாலைகளுக்கான 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளின் பிரிவு IIIக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி "பி"அணி 53 ஓட்டங்களால் மாத்தளை இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியது. சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி "பி" அணி 46.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சோமஸ்கரன், 25 ஓட்டங்களையும், துளக்ஸசன் 27 ஓட்டங்களையும், கலிஸ்ரஸ்டனியல் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மாத்தளை இந்துக் கல்லூரி அணி சார்பில் ரகுநாத் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்கினையும், ரமிஸ்ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்கினையும் டனுஸ்கான் 7.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி "பி"அணி 53 ஓட்டங்களால் மாத்தளை இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தியது. சென்.ஜோன்ஸ் கல்லூரி

147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மாத்தளை இந்துக்கல்லூரி அணி 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 93 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் பவிராஜ் 12 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி சார்பில் ஜோசப் ஸ்ரலோன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும், கருணியன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## மின்னல் வேக கூடைப்பந்தாட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகச் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னல் வேகக் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில்இடம்பெறவுள்ளதாக எனத் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (த-23)



வவுனியா பட்டாணிச்சூர் 786 விளையாட்டுக்கழகம் ஹஜ் பண்டிகையை முன்னிட்டு நடத்திய ஆண்களுக்கான மரதனோட்டம், கடந்த செவ்வாய்க்கிழமை காலை அஷ்ரப் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நவநீதன் ஒரு மணித்தியாலம் 20 செக்கன்களில் [illegible] ஒரு மணித்தியாலம் 80 செக்கன்களில் ஓடி இரண்டாம் இடத்தினையும், [illegible] 40 செக்கன்களில் ஓடி 3 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செவிப்புலனற்றோருக்கான போட்டிகள்

## மட்டு. வாழ்வோசை பாடசாலை வலைப்பந்தில் சூடியது வாகை

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் (கைதடி), இரத்மலானஆகிய செவிப்புலனற்ற இல்லங்களின் மாணவர்களிடையேயான முக்கோண வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 26 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

மும்முனை வலைப் பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு. முதலாமிடத்தினையும் மட்டக்களப்பு வாழ்வோசை செவிப்புலனற்றோர் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தினை இரத்மலான செவிப்புலனற்றோர் பாடசாலைஅணியும், மூன்றாம் இடத்தினை கைதடி நவில் பாடசாலை அணியும் பெற்றுக் கொண்டன.

பரிசளிப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகவும், சமுக சேவைகள் திணைக்கள கிழக்கு மாகாண பணிப்பாளர் என்.மணிவண்ணன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். (ந-23)




# இந்திய – பாகிஸ்தான் தொடருக்கு அனுமதி

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடருக்கு இந்திய மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், பாகிஸ்தான் அணி இந்தியா செல்ல உள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர்கள் எதுவும் நடக்கவில்லை. சர்வதேச போட்டியில் மட்டும், அவ்வப்போது பொது இடங்களில் மோதிக் கொண்டன. கடந்த ஆண்டு உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக விளையாட, பாகிஸ்தான் அணி இங்கு வந்தது.

தற்போது, இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, எதிர்வரும் டிசெம்பர் 22 ஆம் திகதி வரை, நான்கு டெஸ்ட், இரண்டு 'ரி-20' போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. பின்னர், கிறிஸ்மஸ் விடுமுறைக்காக நாடு திரும்பும் இங்கிலாந்து அணி, மீண்டும் 2013 ஜனவரி 6 முதல், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்க மீண்டும் இந்தியா செல்கிறது.

இடைப்பட்ட 14 நாள்களில், இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மூன்று ஒரு நாள், இரண்டு 'ரி-20' போட்டி கொண்ட தொடரை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டது. பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இந்தத் தொடரை நடத்த இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகள் சம்மதித்தன.

### அரசு சம்மதம்

இருப்பினும், மத்திய அரசு முடிவெடுக்காமல் இருந்தது. இது தொடர்பாக, புது டில்லியில் மத்திய உள்துறைச் செயலரை, இந்தியக் கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா சந்தித்து பேசினார். இதில், பாகிஸ்தான் தொடரை நடத்த, மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி கொடுத்தது.

இதனால், இரு அணிகள் பங்கேற்கும் தொடர் நடப்பது உறுதியாகியுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் 22 இல் இந்தியா செல்லும் பாகிஸ்தான் அணி, டெல்லி, சென்னை, கொல்கத்தாவில் மூன்று ஒரு நாள் போட்டியிலும், பெங்களூர், அஹமதாபாத்தில் இரு 'ரி-20' போட்டியிலும் பங்கேற்கிறது. (5)

# மழையால் பாதிக்கப்பட்டது ஆட்டம்

இலங்கை, நியூஸிலாந்து அணிகள் மோதிய ஒரேயொரு 'ரி-20' ஆட்டமும் மழை காரணமாக முடிவுகள் எதுவும் பெறப்படாமல் கைவிடப்பட்டது.

இலங்கைக்கு, நியூஸிலாந்து அணி கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் நேற்று முன்தினம் இரவு பல்லேகல மைதானத்தில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணிக்கு புதிய தலைவராக நியமிக்கப்பட்ட அஞ்சலோ மத்தியூஸ் தலைமை தாங்கினார். உப தலைவராக நியமிக்கப்பட்ட லசித் மலிங்கவும் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தனவும் இந்த ஆட்டத்தில் பங்கேற்கவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

கடும் மழை காரணமாக ஆட்டம் தாமதித்தே ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூஸிலாந்து அணி இலங்கையின் பந்து வீச்சில் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது. 8.4 பந்துப் பரிமாற்றங்களில் 24 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கீடு செய்தது. இதனால் ஆட்டம் தாமதித்து 14 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டு ஆரம்பமானது. இதன் பின்னர் ஓரளவு ஆட்டத்தை வெளிப்படுத்திய நியூஸிலாந்து அணி 14 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் சவுத் தீ ஆட்டமிழக்காமல் 21, எலிஸ் 16, ஓரம் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இவர்கள் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் குலசேகரா, திஸ்ஸர பெரேரா, தனஞ்சய தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.




பதிலளித்து ஆடத் தொடங்கிய இலங்கை அணி 2 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் இலக்கு நஷ்டமின்றி 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் முடிவு எதுவும் எட்டப்படாமல் கைவிடப்பட்டது. (5)



# கிரிக்கெட்டின் முகமது அலி யார்?

சர்ச்சைகளை கடந்து சாதிப்பதில் குத்துச்சண்டை ஜாம்பவான் முகமது அலி போல கெவின் பீற்றர்சன் திகழ்கிறார், என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்தார்.


இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் பீற்றர்சன். சக வீரர்களுக்கு எதிராக 'டுவிட்டரில்' அவதூறு செய்தி வெளியிட்டு சர்ச்சையில் சிக்கினார். இதிலிருந்து மீண்ட இவர், தற்போதைய இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் பெற்றுள்ளார். இந்தத் தொடரில் தனக்கு எதிரான விமர்சனங்களுக்கு சரியான பதிலடி கொடுப்பார் என்று விவியன் ரிச்சர்ட்ஸ் கருத்து தெரிவித்தார்.

இது குறித்து ரிச்சர்ட்ஸ் கூறியதாவது:

முன்னாள் குத்துச்சண்டை வீரர் முகமது அலியின் சர்ச்சைக்குரிய பேச்சு மற்றும் நடவடிக்கை பிடிக்காதவர்கள் அவரின் வீழ்ச்சியை காண விரும்பினார்கள். ஆனால், அவர் மிகப் பெரிய வீரர் என்பதால் கடைசி வரை அசைக்க முடியவில்லை. இதேபோல் பீற்றர்சனும் சமீபத்தில் அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். பின்னர் மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார்.

பீற்றர்சனும், முகமது அலியும் ஒன்று என்று கூறவில்லை. இருப்பினும் அவரைப் போல தாமாகவே சில பிரச்சினைகளை இழுத்துக்கொள்கிறார். இங்கிலாந்து அணிக்கு பீட்டர்சன் மிகவும் அவசியமானவர். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் திறமையை நிரூபிப்பார் - என்றார். (5)





# ஜோகோவிச் முதலிடம்

சர்வதேச ரென்னிஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சர்வதேச தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க உள்ளார்.கடந்த ஜூலை மாதம் நட்சத்திர வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரிடம் முதலிடத்தை இழந்த ஜோகோவிச், மீண்டும் முதலிடத்தை பிடிக்க போராடி வந்தார். இந்த நிலையில் அடுத்த வாரம் வெளியிடப்பட உள்ள ஏடிபி ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்துக்கு வருகிறார்.

2011 ஆம் ஆண்டு சுவிஸ் உள்ளரங்கம் மற்றும் பரிஸ் தொடரில் பட்டம் வென்ற ரோஜர் பெடரர், இந்த முறை சுவிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் டெல் போட்ரோவிடம் தோல்வியுற்றார்.

மேலும் அடுத்த வாரம் நடைபெற உள்ள பரிஸ் பகிரங்கத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இதனால் அவர் ஏற்கனவே பெற்றுள்ள தரநிலைப் புள்ளிகளில் சரிவு ஏற்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அவரால் போதுமான தரநிலைப் புள்ளிகளைப் பெற முடியாது. எனவே, அவருக்கு அடுத்த இடத்தில் உள்ள ஜோகோவிச் முதலிடத்தைப் பிடிக்க உள்ளார்.

லண்டனில் அடுத்த வாரம் நடைபெற உள்ள உலகச் சுற்று இறுதிப்போட்டியில் ஜோகோவிச் முதலிடத்தை பிடிப்பது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்புக்கெதரவை இணையுங்கள்

இலங்கை அணியின் இளம் வீரர் சாமர கப்புகெதரவிற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டி மெல் தெரிவித்துள்ளார். தன்னை நிரூபிப்பதற்கு சாமர கப்புகெதரவிற்கு தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அணியால் மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறக்கப்பட்ட சாமர கப்புகெதர, இதுவரை இலங்கை சார்பாக 92 ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பங்குபற்றி 8 அரைச்சதங்களுடன் 22.04 என்ற மிகக்குறைவான சராசரியுடன் காணப்படுகிறார். வழங்கப்பட்ட வாய்ப்புக்களை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக அவர் மேல் காணப்படுகிறது.

எனினும் கருத்துத் தெரிவித்துள்ள அசந்த டி மெல், சாமர கப்புகெதர அதிக திறமைகளைக் கொண்ட வீரர் எனவும், அவருக்குத் தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு சாமர கப்புகெதர நான்காம் இலக்கத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்க வேண்டுமெனத் தான் எண்ணுவதாகவும் தெரிவித்தார்.



சாமர கப்புகெதர தவிர, திலின கண்டம்பியும் தேர்வாளர்களின் தெரிவுக்கான வாய்ப்புக்களுள்ள வீரர்களுள் ஒருவராகக் காணப்படுகிறார் எனத் தெரிவித்த அசந்த டி மெல், அவர் திறமையான துடுப்பாட்ட வீரர் என்ற போதிலும், அவரது களத்தடுப்பை அவர் மேம்படுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

இலங்கை அணியின் 'ரி-20' உப தலைவராக லசித் மலிங்கவை நியமிப்பதற்கு அவருக்கு மேலதிக பொறுப்பை அணியில் வழங்க விரும்பியமையே காரணம் எனவும் அசந்த டி மெல் தெரிவித்துள்ளார். (5)



# சிறப்பாக ஆடியும் கிடைக்கவில்லை முதலிடம்

இந்த ஆண்டில் தான் தொடர்ச்சியாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ள போதிலும் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமை ஆச்சரியம் தருவதாக ஐக்கிய அமெரிக்காவின் ரெனிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

துருக்கியின் இஸ்தான்புல்லில் இடம்பெற்று வந்த பெண்கள் ரெனிஸ் சம்மேளனத்தின் சம்பியன்ஸிப் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்ற பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகின் 2 ஆம் நிலை வீராங்கனை மரியா ஷரபோவாவை 6 - 4, 6 - 3 என்ற கணக்கில் தோற்கடித்தே செரினா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த அவர், முதலிடத்திற்குத் தான் பொருத்தமானவர் எனக் கருதுவதாகத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இரண்டு கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டங்கள், ஒலிம்பிக்கில் தங்கம், மட்ரிட் மற்றும் பெண்கள் சம்பியன்ஸிப் தொடர் ஆகியவற்றில் சம்பியன் பட்டம் வென்ற பின்னரும் மூன்றாவது இடத்திலேயே தரப்படுத்தப்பட்டுள்ளமை ஆச்சரியம் தருவதாக அவர் தெரிவித்தார்.

காயங்களால் அவதிப்பட்டு வந்த செரினா வில்லியம்ஸ் இவ்வாண்டு பங்குபற்றிய 63 போட்டிகளில் 59 போட்டிகளில் வெற்றியும், 4 போட்டிகளில் மாத்திரம் தோல்வியடைந்ததோடு, 7 சம்பியன் பட்டங்களையும் வென்றிருந்தார்.

இவற்றில் விம்பிள்டன் பட்டம், ஐக்கிய அமெரிக்க பகிரங்க ரெனிஸ் சம்பியன் பட்டம், ஒலிம்பிக் தங்கப் பதக்கம் ஆகியவை அடங்குகின்றன.

பெண்கள் தனிநபர் டெனிஸின் முதலிடத்தில் விக்டோரியா அஷரெங்காவும், இரண்டாமிடத்தில் மரியா ஷரபோவாவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# மீள்வார் சச்சின்

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் சச்சின், மீண்டும் பழைய ஆட்டத்திறனை வெளிப்படுத்துவார் என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் பல சாதனைகளை நிகழ்த்திய சச்சின், சமீபகாலமாகத் துடுப்பாட்டத்தில் திணறுகிறார். ஐந்தாவது ஐ.பி.எல். தொடருக்குப்பின்பு இதுவரை ஒரு அரைச்சதம் கூட அவர் அடிக்கவில்லை.

கடைசியாக சச்சின் விளையாடிய 9 இன்னிங்ஸில், 6 முறை அவர் போல்டானார். இது அவரது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. இங்கிலாந்துத் தொடருக்கு முன்பு தான் இழந்த ஆட்டத்திறனை மீட்க, ரஞ்சி கிண்ண போட்டியில், மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு சச்சின் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வீடு/ கட்டடம் வாடகைக்குத்தேவை**

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு/ கட்டடம் வாடகைக்குத் தேவை. 1500 சதுர அடி பரப்பளவு எதிர்பார்க்கப்படுகின்றது. வாடகை முற்பணம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- 0777341951

(சி/4392) (15-14)

**தேவை**

யாழ். நகரப்பகுதியில் பொருள் களை களஞ்சியப்படுத்துவதற்கு வீடு அல்லது கட்டடம் வாடகைக் குத்தேவை

தொடர்பு:- 0771807672

**வழிகாட்டி**

நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம் - 05.11.2012

- கிராம சேவையாளருக்கான போட்டி பரீட்சை விசேட வகுப்புகள்
  முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
  ஆசிரியர் : த.தவசேகர்
- இலங்கை சட்டக்கல்லூரி (LAW COLLEGE) போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள்
  இது துறைபோந்த சட்டத்தரணிகளாலும் சட்ட விரிவுரையாளர்களாலும் நடத்தபடுகிறது.
- B.A. Social Work போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 100% வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் கற்கைநெறி)
- Markering Communication சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் துறைகளை நன்கு விளங்கிக் கொள்ளவும், சுயதொழில், தனியார் துறைகளில் இலகுவில் வேலை வாய்ப்பைப் பெற்று கொள்வதற்கான ஓர் கற்கை நெறி

பதிவுகள் ஆரம்பமாகி விட்டன

தொடர்புகளுக்கு: 0776699892, 0773867257

வழிகாட்டி முடக்காட்டு சந்தி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.


**கண்ணீர் காணிக்கைகள்**



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் இலங்கை வங்கியின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளருமாகிய இந்து அன்னையின் தவப் புதல்வன்

**ஐ.தங்கேஸ்வரன்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

பழைய மாணவர் சங்கம்.

(சி/4393) (15-14)


**Doctor on Call** Home Visiting Service

வைத்தியரை அழையுங்கள்

MBBS Doctors on your service

M.B.B.S வைத்தியர்களால் நேரடியாக உங்கள் வீட்டிலேயே வைத்திய சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படும் உன்னத சேவை.
(ஒரே தடவை பதிவு செய்வதன் மூலம்.) டலாம்

வைத்திய உதவி உங்கள் ஒரு அழைப்பில் 0777302882

முக்கிய குறிப்பு. முற்பதிவு செய்வதன் மூலம் முன்னுரிமை.**

இது ஒரு அவசர சேவை அல்ல. நோயாளியின் அமைவிட தூர எல்லை, சேவை நேரம் என்பனவற்றின் அடிப்படையில் கட்டணம் தீர்மானிக்கப்படும். [illegible]


**மரண அறிவித்தல்**



*சின்னத்தம்பி விசுவநாதன்*

*(இளைப்பாறிய கிராம சேவையாளர்)*

துன்னாலை மேற்கு கரவெட்டியை சேர்ந்த சின்னத்தம்பி விசுவநாதன் நேற்றுமுன்தினம் (30.10.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் ராசம்மாவின் அன்புக் கணவரும், அருளானந்தத்தின் (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வடமராட்சி) அன்புத் தந்தையும், இந்திராணியின் அன்பு மாமனும், சுபாகரன் (London), சுஜித்தா (London), சுமேதன் (Colombo) ஆகியோரின் அன்புப் பேரனும், சுதர்சினி (London), சிவகாந்தன் (London), ஆகியோரின் அன்புப் பேரனும், டேவினா, லவின் (London) ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2012) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பள்ளந் தோட்டம்" துன்னாலை மேற்கு, கரவெட்டி.

தகவல்: மகன் வி.அருளானந்தர்

**மரண அறிவித்தல்**



*திருமதி தவசிங்கம் ஜெயலட்சுமி (வெண்ணிலா)*

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 671, விநாயகபுரம் துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட தவசிங்கம் ஜெயலட்சுமி (வெண்ணிலா) நேற்று (31.10.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*671, விநாயக புரம், துணுக்காய்.*

(24971) (15-14)

*தகவல்: கணவர், சகோதரர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இன்று முதல்

தேசிய தேவையை முன்னிட்டு, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால், இலங்கையின் அனைத்து FM வானொலி அலைவரிசைகளும் 2012 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதியிலிருந்து மீளமைக்கப்பட்டுள்ளன.

## நீங்கள் எங்கு இருந்தாலும்



**103.4FM** அல்லது

**103.6FM**

நாடுமுழுவதும்

மாறாமல் மாறுங்கள்

சூரியன் மாத்திரமே!

# சூரியன் FM

SOORIYAN

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நடப்பது இனப்படுகொலையே

## பிரான்ஸ் உயர்கல்வி மாணவ சமூகத்தின் கருத்துருவாக்கச் சிந்தனைமையம் கருத்து



இலங்கையில் ஈழத்தமிழர் மீது நடந்தேறுவது ஓர் இன அழிப்பே என்று பிரான்ஸின் முக்கியமான உயர் கல்வி மாணவ சமூகத்தின் கருத்துரு வாக்கச் சிந்தனைமையம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கான அரச பிரதிநிதித்துவமாக நாடுகடந்த தமிழீழ அரசை நோக்குவதாகவும் மேற்படி மையம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் உள்ளக விவகாரம் மற்றும் சர்வதேச விவகாரம் தொடர்பில் அரச மற்றும் அரசியல் உயர்மட்டங்களுக்கான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கிவருகின்ற உயர்கல்வியாளர்களை பிரதிநிதிகளாக் கொண்ட கருத்துருவாக்கச் சிந்தனை மையமொன்று கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் நாடாளுமன்ற வளாகக் கூடம் ஒன்றில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தது.

மேற்படி கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச விவகாரம் தொ டர்பில் மேற்படி கருத்தரங்கில் பேசப்பட்ட போது பிரான்ஸ் அரச மட்டம் எடுக்க வேண்டிய முக்கிய விடயங் களில் ஒன்றாக இலங்கை யில் தமிழர்களுக்கு நடந்தேறிவரும் கொடுமைகள் குறித்து காத்திரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தியிருந்த தோடு தமிழர்கள் மீது நடப்பது ஓர் இனப்படுகொலை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

இதேவேளை பெரும் இன அழிப்பை எதிர்கொண்டு வரும் தமிழர்களுக்கான அரச பிரதிநிதித்துவமாக நாடு கடந்த தமிழீழ அரசை அங்கீகரித்துக் கொள்கின்றோம்.

குறித்த சிந்தனை மையத்தின் 2013 ஆம் ஆண் டுக்கான சர்வதேச விவகாரம் தொடர்பிலான பிரதான வேலைத்திட்டமாக தமிழர் கள் விவகாரமே உள்ளது.

உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டிருந்த மேற்படி நிகழ்வரங்கில் நாடு கடந்த தமிழீழ அரசின் அமைச்சர் மகிந்தன் சிவசுப்பிரமணியம் தலைமையில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். (வ)


**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ரீதியான ஆலோசனையின் இறுதிநாள் டிசெம்பர் 15 ஆகும்**

* இலங்கைத்தீவின் பல பகுதிகளிலிருந்தும் மூவின மக்களும் மேற்படி ஆலோசனை செயற்திட்டத்தில் எம்மோடு இணைந்துகொண்டு பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
* எமது வரையறுக்கப்பட்ட ஆளணியினருடன் எமக்கு கிடைக்கப் பெற்ற அளவு கடந்த விண்ணப்பங்களை தயார்செய்ய கால அவகாசம் எமக்குத் தேவைப்படுகின்றது.
* இதன் காரணமாக 15.12.2012 அன்றுடன் மறு அறிவித்தல் வரை மேற்படி ஆலோசனைக்கு புதியவர்களை இணைத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள எமது கௌரவ இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது என்பதை பணிவடக்கத்துடன் அறியத்தருகின்றோம்.

G.T. உலகசேகரம் (பொதுமுகாமையாளர்)
இயக்குநர் சபைக்கட்டளைப்படி.
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016.





**கண்ணீர் அஞ்சலி**



எமது தேவஸ்தான வளர்ச்சிக்கு பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் நல்கியவரும், தேவஸ்தான தேவைகள் கருதி பெறுமதிமிக்க அன்பளிப்புக்களை உவந்தளித்தவருமாகிய எம் விநாயகர் அன்பன்,
காரைநகர் மைந்தன்
பரமசாமி அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார் அன்னை பரமசாமி லோகவாரியம்மா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

புதுவீதி,
கோய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ ஞான செல்வ விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினரும், ஆலய அர்ச்சகரும், அடியார்களும்.
(சி/4332) (2-6)



**அந்தியேட்டி நிகழ்வும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**



தோற்றம்
17.10.1969

மறைவு
19.09.2012

அமரர்
**தியாகராஜா தேவராசா** (கண்ணன்)

கடந்த 19.09.2012 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் தியாகராசா தேவராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(02.11.2012) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் திருநாவலூர் எரிஞ்சி அம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று பின்னர் அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பர்மடம், பருத்தித்துறை. (24919)(5.6) குடும்பத்தினர்.



**ஈர விழிகளின் நீங்காத சோக நினைவுகளுடன் 90 ஆம் நாளில்....**



அன்னையின் மடியில்
05.02.1978

ஆண்டவன் அழைப்பில்
04.08.2012

நாள்கள் பல கடந்தாலும்
மாதங்கள் பல மறைந்தாலும்
ஆறாதையா எம் துயரம்
எல்லோர் மனங்களிலும்
இடம் பிடித்த உத்தமனே
உங்களை நினையாமல்
ஒரு நாளும் இல்லை ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
**கனகரத்தினம் தவக்குமார்**

கடந்த 04.08.2012 அன்று மீளாத் துயில் கொண்ட எங்கள் கண்மணி கனகரத்தினம் தவக்குமாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (31.10.2012) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (01.11.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் மரணச் செய்தி கேட்டு நேரிலும்,தொலைபேசிகள், தந்திகள், மின் அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு. (24940)(5.6) கோமதி (மனைவி)



**நவீன கோழிப்பண்ணை விற்பனைக்கு**
**நவாலி, மானிப்பாய்**

2000 கோழி வளர்ப்பதற்கு மூட்டு கட்டடம், Office 2 அறையுடன் Security Office நடுவில் பூங்காவனம் 5.25 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு - குத்தகைக்கு - அல்லது பங்காளியாக.
தொ.பே. 0778350478, 0779050213
நல்ல சுற்றாடல், சுகாதாரம், தண்ணீர் வசதி.
(24949)(2-6)



**Immidiate Vacancies**
**Jaffna -Sri Lanka**
**Mix Development**

மேற்படி அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு உடனடியாக கீழ்வரும் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 07.11.2012 இக்கு முன் இரு உறவினரல்லாதவர்களின் சிபார்சுடன் Curriculam vitae வை கீழ்வரும் Email விலாசத்துக்கு உடன் அனுப்பவும்.

Secretrary: ஜீ.சி.ஈ. (A/L) தகைமையுடன் ஆங்கிலத்தில் சரளமாக எழுதவாசிக்கத் தெரிவதுடன் கணினி துறையில் பூரண அறிவுடையவராக இருத்தல் வேண்டும். சிங்களம்,தமிழ் மேலதிக தகைமைகளாகும்.
Accountant: HNDA + Computer sound Knowledge
Engineer: B.Sc/NDE +கணினி

(சி/4384)(5-6) Puraku@hotmail.com



**மரண அறிவித்தல்**

**கந்தையா அம்பலவாணர்**



மயிலிட்டி தெற்கு, கட்டுவன், தெல்லிப் பழையைப்பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அம்பலவாணர் கடந்த (29.10.2012) அன்று காலமானார்.

அன்னார் கந்தையா- மீனாட்சி தம்ப தியரின் கனிஷ்ட புத்திரனும் நடராசா - சின்னத்தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மகாலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென் றவர்களான முத்துத்தம்பி, வேலுப்பிள்ளை, இராசம்மா, தங்கம்மா மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை இலட்சுமி, Dr.சிதம்பரநாதன் (கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை) ஆகியோரின் சகோதரனும் சுஜித்தா, அனுஷா, கலைவாணி, அகிலா, பிரசாந்தினி, கார்த்திகா, அஜித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2012) வியாழக்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. க. சிதம்பரநாதன் (சகோதரன்).
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. (24223)(2-6)


## விநாயகர் விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.1

மண்டைதீவு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள வழிப்பிள்ளையார் ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் கடந்த திங்கட்கிழமை இரவு திருட்டுப் போயுள்ளது.

மிகவும் சிறிய ஆலயமான இங்கே இருந்த கருங்கல்லினால் ஆன விநாயகர் விக்கிரகமே காணாமல் போய்விட்டதாகவும் இது குறித்துப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-7)


**விற்பனைக்கு**

5 கியூப் TATA (2516) LG xxxx இலக்கத்தினை உடைய டிப்பர் வாகனம் விற்பனைக்கு உள்ளது. மிகக் குறைந்த தூரம் பாவித்த வாகனம்.
இடம் : கொம்ரேக், வைத்தொழில்பேட்டை பூந்தோட்டம், வவுனியா நேரில் வந்து பார்வையிடலாம். அலுவலக நாள்களில் மட்டும்
(20936)(2-6) T.P: 024 222 1208



**தவறிவிட்டது**

புவிராஜ் கஜரூபன் ஆகிய எனது 913303580V என்னும் இலக்கத்தை உடைய தே.அ.அட்டை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 0750474084
(24950)(2-6)



**For Lease**

Beach front land in Jaffna Municipal area suitable for guest house / hotel

5 Lachams available on B.O.T conditions

Contact: 021 222 2574
(Office hours)
(சி/4385)(2-6)



**உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு**

நல்ல நிலையிலுள்ள Tafe பெட்டியுடன் NP - RW xxxx இலக்கமுடைய 22.06.2011 பதிவுத் திகதியுடனுள்ள உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
T.P: 0778350478
0779050219
(24948)(2-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org